# களத்தில்



"எம்மை நிம்மதியாக வாழவிடுங்கள்" என்பது தான் எமது மக்களின் எளிமையான அரசியல் அபிலாசை. இந்த நியாயமான, நீதியான, நாகரீகமான எமது மக்களின் வேண்டுகோளை சிங்கள அரசு எப்பொழுது அங்கீகரிக்கின்றதோ, அப்பொழுதுதான் ஒரு நிரந்தர சமாதானமும், தீர்வும் ஏற்பட வாய்ப்புண்டு.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

(26.08.1999) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (193) அன்பளிப்பு : 60 p

# ஐந்தாண்டுகளின் சாதனைப் பட்டியல்

## - இனப்படுகொலைக் குற்றவாளிகள் -



### ஐந்தாண்டுகளில் சிதைவுறும் சந்திரிகா

17 வருடங்களாக தொடர்ச்சியாக சிங்கள இனவாத அடக்குமுறை இயந்திரத்தின் தலைமையாக இருந்து வந்த ஐக்கிய தேசியக் கட்சியை இடம்மாற்றி இன அடக்குமுறைக்கு துடிப்பும் புது உற்சாகமும் கொடுப்பதற்காக சந்திரிகாவின் தலைமையை சிங்களம் தேர்வுசெய்து ஐந்தாண்டுகள் ஆகிவிட்டன. இவ் ஐந்தாண்டுகளின் சாதனைப் பட்டியலை வெளியிட்ட சந்திரிகா எண்பத்தைந்து சதவீதம் போரை தான் வெற்றிகண்டதாகவும் புலிகளின் அனைத்துலக ரீதியான பரிணாமத்தை தோற்கடித்ததாகவும் சிங்களத்திற்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

சந்திரிகா போரை வெல்கிறாரா? தமிழர்களின் விடுதலை எழுச்சியின் ஈட்டி முனையாகத் திகழும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இந் நவீனமயப்படுத்தப்பட்ட சிங்களத் தலைமையின் போர் உத்திகளினால் பலவீனப்படுத்தப்பட்டுள்ளதா?

90களின் ஆரம்பத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்படுத்திய தொடர்ச்சியான அரசியல் இராணுவ நெருக்கடிக்குள் அகப்பட்டு சிங்கள போர் இயந்திரம் களைப்படைய தொடங்கிய காலகட்டத்தில் சிங்களத்திற்கு ஏற்புடைய தலைமை தேவைப்பட்டது. தமது அடக்குமுறை போர் இயந்திரத்திற்குப் புதிய தலைமையை வழங்கக்கூடிய நுட்பமான தலைமையை சிங்களம் தேர்வுசெய்ய வேண்டிய வரலாற்று சூழ்நிலை ஏற்பட்டது.

தொடர்ச்சி 8ம் பக்கம்

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

# பொருளாதாரத்தின் பெயரால்

இலங்கைத் தீவில் தமிழ் இன அழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் சிங்கள பெரும்பான்மை அரசாங்கங்கள் தங்கள் செயல்களை நியாயப்படுத்த தங்கள் இன அழிப்பு செயற்திட்டங்களுக்குப் பொருளாதாரத்திட்டங்கள் என்ற போர்வை போர்த்தி வருவது இலங்கைத் தீவில் காலனித்துவம் விலகியது முதல் நடைபெற்றுவரும் ஒன்று.

காலனித்துவம் விலகியவுடன் இரண்டு விதங்களில் தமிழர்களுக்கு எதிரான செயற்திட்டங்கள் சிங்கள பெரும்பான்மை அரசாங்கங்களால் செயற்படுத்தப் பட்டன. ஒன்று தமிழர்களின் தாயகத்தில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி தமிழர்களின் நிலத்தை சிங்கள பூமியாக மாற்றுவது. அடுத்தது தமிழர்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவ விகிதாசாரத்தை குறைத்து சட்டவாக்கம் நிர்வாகம் சட்டஅமுலாக்கத்தில் தமிழர்களால் தலையிட்டு எதையும் செய்ய முடியாத நிலையைத் தோற்றுவிப்பது. இதன் மூலம் தமிழர்களை அவர்களது சொந்த தாயகத்திலேயே இரண்டாந்தர பிரஜைகளாக அல்லது நாடற்றவர்களாக மாற்றுவது. அவ்வாறு செய்வதன் மூலம் இலங்கைத்தீவு முழுவதும் சிங்கள பௌத்த தேசம் என்ற பௌத்த சிங்கள பேரினவாதத்தின் கனவை நனவாக்குவது.

இந்த அரசியல் நோக்குகளுடன் இயங்கத் தொடங்கிய சிங்களத் தலைமைகள் பொருளாதார அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரில் 1949இல் கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தை உருவாக்கி தமிழர்களின் விவசாய பூமியிலே சிங்களக் குடியேற்றங்களை வேகப்படுத்தியது. இதன் தொடர்ச்சியாக கந்தளாய், அல்லை போன்ற பல சிங்களக் குடியேற்றங்கள் அடுத்தடுத்து உருவாக்கப்பட்டன. இதனால் 1921இல் 4.5 வீதமான சிங்களக் குடித் தொகையை கொண்டிருந்த மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்கள் சரியாக 50 வருடத்தில் 17. 7 வீதமான சிங்களவர்களைக் கொண்ட பிரதேசமாக மாற்றப்பட்டது. அதேவேளை தமிழர்களின் சனத் தொகை இதே கால கட்டத்தில் இதே பிரதேசத்தில் 53.3 வீதத்திலிருந்து 46.4 வீதமாக வீழ்ச்சியுற்றது. திருகோணமலை மாவட்டத்தில் அதே காலகட்டத்தில் சிங்களவர்களின் தொகை 3 வீதத்தில் இருந்து 28.8 ஆக உயர தமிழர்களின் தொகை 55.2 வீதத்தில் இருந்து 38.2 வீதமாக குறைந்தது. இந்த மாற்றங்களின் விளைவாக தமிழர் தாயகத்தின் நீண்ட பிரதேசமாம் அம்பாறையை மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து தனி மாவட்டமாக சிங்கள பெரும்பான்மை அரசாங்கங்கள் மாற்றிக் கொண்டன. திருகோணமலையில் சேருவெல என்ற ஒரு சிங்களத் தொகுதியினை உருவாக்கி கொண்டனர். இவ்வாறாக தமிழர்களின் தாயகத்தையும் தமிழர்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவ விகிதாசாரத்தையும் அழித்த சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்கள் இச் செயல்பாடுகளை பொருளாரத் திட்டங்கள் என்று கூறிக் கொண்டன.

அவ்வாறே மலையகத் தமிழர்களின் குடியியல் உரிமைகளை பறித்த மசோதாவை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அதனையும் பொருளாதார நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் முயற்சி என்றே அறிமுகம் செய்தார். சிங்களம் மட்டும் சட்டம் தரப்படுத்தல்கள் போன்ற கொடிய திட்டங்கள் எல்லாமே சிங்கள தேசத்தின் பொருளாதார தேவைகளை ஒழுங்காக்கும் செயற்பாடுகளாகவே உலகிற்கு காட்டப்பட்டன.

ஆனால் இத்திட்டங்கள் தமிழின அழிப்புத் திட்டங்களாகவே கொள்ளப்படவேண்டும். இனஅழிப்பு என்பது வெறுமனே ஒரு ஆளையோ அல்லது இளத்தினையோ கொன்று அழிப்பது என்றே பலரும் நினைக்கின்றனர். ஆனால் ஐக்கிய நாடுகள் சபையின் அறிஞர்களின் கருத்தின்படி ஒரு ஆளையோ அல்லது இனத்தையோ வாழ விடாமல் எடுக்கும் எல்லா செயற்பாடுகளுமே இன அழிப்புதான். இவ்வகையில் கல்லோயாத்திட்டம் போன்ற எல்லா ஆற்றுவளத் திட்டங்களுமே தமிழின அழிப்புக்கான கருவிகளாகவே சிறீலங்கா அரசாங்கத்தினால் நெறிப்படுத்தப்பட்டன.

இந்த உண்மையின் பின்னணியில் கல்லோயாத் திட்டத்தைப் பார்க்கும்பொழுது கல்லோயா குடியேற்ற வாசிகள் உட்பட தமிழர் பிரதேசங்களில் சிங்கள குடியேற்றத்திட்டங்களில் குடியமர்த்தப்பட்டவர்கள் அனைவரும் தமிழர்களை இனவெறியுடன் நோக்குபவர்களாகவே விளங்கியதை உணரலாம். 1956இல் கொழும்பில் சிங்களம் மட்டும் சட்டத்திற்கு எதிராக தமிழர்கள் காலிமுகத் திடலில் நடாத்திய சத்தியாக்கிரகத்தை புத்தரின் 2500ஆவது பிறந்த நாளை கொண்டாடிக் கொண்டிருந்த பௌத்த பிக்கு ஒருவரின் தலைமையில் சென்ற சிங்களக் காடையர்கள் வன்முறைகளைப் பிரயோகித்து குழப்பியதும், அதன் எதிரொலியாக கல்லோயாவில் தமிழர்



களை சிங்களக் காடையர்கள் கொன்று குவித்ததும் வரலாறு. இந்த வரலாறு தினம் தினம் தமிழர் தாயகத்தின் எல்லைகளில் குடியேற்றவாசிகளால் தொடரப்பட்டது. தமிழர்களின் நிலங்களை சிங்களக் குடியேற்றவாசிகள் சட்டவிரோதமாக தமதாக்கி அங்கு பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த தமிழர்களை விரட்டியடித்ததும் அந்தக் காணியை சிறீலங்கா அந்தக் குடியேற்றவாசிகளுடையதாக உறுதி வழங்கி பாராட்டும். தான் வாழ்ந்த நிலத்தையும் தொழிலையும் இழந்த தமிழ் விவசாயி வாழ்வதற்கு துடிதுடிப்பான். கடலிலும் இதே கதை. குடியேற்றவாசிகள் தமிழர்களின் மீன்படு பிரதேசங்களை தமதாக்கி தமிழ் மீனவர்களை விரட்ட சிறீலங்கா கடற்படை தமிழ் மீனவர்களின் படகுகளை பறித்து சிங்களவர்களுக்கு கொடுத்து விட்டு தமிழ் மீனவர்களுக்கு அடிபோட்டு அனுப்பி வைக்கும். இப்படியாக இந்த குடியேற்றவாசிகள் தமிழ் சிங்கள தேச இனங்களுக்கு இடையிலான நல்லுறவை ஒத்துழைப்பை கெடுத்ததின் பின்னணியிலேயே தமிழ் மக்கள் தாம் சிங்களவர்களுடன் சேர்ந்து வாழ்தல் இயலாது என்ற முடிவுக்குத் தள்ளப்பட்டனர். ஆனால் அன்றைய தமிழ்த் தலைமை இந்த தமிழ் மீனவ, விவசாய, பாட்டாளி மக்களின் பிரச்சினைகளை உரிய முறையில் அணுகாததின் விளைவாக காலப்போக்கில் முழுத் தமிழினமும் நாடற்ற தேச இனமாகும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இந்த நிலையில் இந்த ஏழைத் தமிழ் பாட்டாளி மக்களுக்கும் அனைத்து தமிழ் மக்களுக்கும் சமமான மதிப்பினை வழங்கும் தமிழீழ மக்களின் தேசிய விடுதலை இயக்கமாம் தமிழீழ விடுதலைப் புலிகள் சகலவிதமான அடக்கு முறைகளுக்கும் ஒடுக்கு முறைகளுக்கும் எதிராக விடுதலை கோரி போராடத் தொடங்கினர். இதன் பின்னரே எல்லைக் கிராமங்களில் வாழும் தமிழ் மக்களை சிங்களக் குடியேற்ற வாசிகள் தாம் நினைத்தவாறெல்லாம் நடத்தி துன்புறுத்தும் செயல்கள் நிறுத்தப்பட்டன.

ஆயினும் சந்திரிகாவின் படைகள் சிங்களக் குடியேற்ற வாசிகளுக்கு ஆயுதப் பயிற்சிகள் அளித்து அவர்களைத் துணைப் படையாக மாற்றியுள்ளதால் எல்லைக் கிராமங்களில் வாழும் தமிழ் விவசாய, மீனவ மக்கள் பாதுகாப்பற்றவர்களாகவே வாழ்கின்றனர். மேலும் இந்த ஏழைத் தமிழ் மக்களின் தொழில்களை செய்ய விடாது தடுத்தும் தொழில்களை செய்வதற்குத் தேவையான மூலப் பொருட்களை, தொழில்நுட்ப பொருட்களை மறித்தும் சிறீலங்கா செய்து வரும் கொடுமைகளால் இந்த சிங்களக் குடியேற்றங்களுக்கு அருகில் வாழும் தமிழ் மக்களின் வாழ்வு மிகவும் துன்பமான வாழ்வாக உள்ளது. ஆனாலும் அவர்கள் நெஞ்சங்கள் தமிழீழத் தாயகத்தினை காக்கும் உறுதியும் வலிமையும் கொண்டவை. இதனை உணர்ந்த சந்திரிகா தமிழ் மக்களையும் விடுதலைப் புலிகளையும் தனிமைப்படுத்தி அவர்களின் மனஉறுதியை அழித்து தன் ஆக்கிரமிப்பை முன்னெடுக்கத் துடியாகத் துடித்தார். ஆனால் இன்று எல்லைக் கிராமங்களில் சந்திரிகாவின் படைகள் தான் எந்தநேரம் என்ன நடக்குமோ எனத் துடித்துக் கொண்டிருக்கின்றனர்.

சந்திரிகா தான் தமிழீழ மக்கள் மேல் தொடுத்துள்ள மக்கள் மீதான யுத்தத்தையும் பொருளாதார தேவைகளை நிறைவு செய்கின்ற செயல்பாடுகள் போல் காட்டுவதற்கு பாதை திறப்பு-சமாதானத்திற்கான யுத்தம் போன்ற பெயரீடுகளை சூட்டி உலகின் கண்களில் மண்ணைத்தூவ முயன்றார். ஆனால் அவற்றின் போலித்தனங்கள் இன்று உலகிற்கு நன்கு அம்பலமாகி வருகின்றன. தமிழர்களை உலகமயமாக்கலுக்கு எதிரானவர்கள் எனக் காட்ட முயன்று அதுவும் கைகூடாத நிலையில் சந்திரிகா தவிக்கின்றார். தமிழர்கள் இலங்கைத் தீவின் பொருளாதாரத்திற்கும் உலகப் பொருளாதாரத்திற்கும் அளித்து வந்த பங்களிப்புக்களை சிறீலங்கா தடை செய்துள்ளமை சர்வதேச குற்றம். தமிழர்களின் தாயகத்தின் இயற்கை வளங்களை அழித்து உலகின் அமைதிக்கு எதிரான குற்றச் செயல்களில் சந்திரிகா தாராளமாக ஈடுபட்டுவருகிறார். இயற்கை வளங்களும் கலாச்சார பிரதேசங்களும் உலகின் பொதுச் சொத்தாகப் போற்றப்படுபவை. இவற்றை அழிப்பவர்களும் சர்வதேச அமைதிக்கு குந்தகம் விளைவிப்பவர்களாகவே ஐக்கிய நாடுகள் சபையால் சுட்டிக்காட்டப்படுகின்றனர். எனவே சிறீலங்கா அரசாங்கம் என்னதான் பொன்விழாக்களை கொண்டாடி அங்கு பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் வெற்றிபெற்றுவருவதாக நடித்தாலும் சிறீலங்கா இலங்கைத்தீவின் பொருளாதாரவளத்தை நாசமாக்கி தன் பௌத்த சிங்கள பேரினவாதத்திற்கு தீனி போடுகின்றது என்பதே நடைமுறை உண்மை. இந் நிலை மாறுவதற்கு ஒரே வழிதான் உண்டு. இலங்கைத் தீவின் இரு அரசுகளான தமிழீழ அரசினதும் சிங்கள அரசினதும் தனியான இறைமைகளும் தன்னாதிக்கங்களும் மதிக்கப்பட்ட நிலையில் இரு அரசுகளும் இலங்கைத்தீவின் பொருளாதாரத்திற்கு பங்களிப்புக்களை வழங்கி பரஸ்பரம் நல்லுறவு ஒத்துழைப்புக்களுடன் இயங்கும் ஒரு காலத்தை உருவாக்குவதே அவ்வழி. இதனை சிறீலங்கா செய்யமாட்டாது. ஆதலால் சர்வதேச சமூகம் இந்த யதார்த்தத்தை உணர்ந்து அக்காலம் உருவாக உதவவேண்டும். அதுவே இலங்கைத்தீவின் அனைத்து மக்களதும் சுபீட்சத்திற்கு உதவும் ஒரே வழி.




| | | | | | |
|---|---|---|---|---|---|
| AUSTRALIA<br>TCC<br>P O Box 375,<br>Preston,<br>Victoria 3072. | CANADA<br>WTM<br>54 Eaton Avenue,<br>Toronto,<br>Ontario M4J 2Z5 | DENMARK<br>LTTE<br>P O Box 47,<br>7400 Herning | FRANCE<br>TCC<br>341 Rue Des Pyrenees,<br>75020 Paris. | GERMANY<br>TCG<br>Postfach 340251,<br>51624 Gummersbach | ITALY<br>TCC<br>Via Vincenzo Di Pavia No14,<br>90138 Palermo. |
| NETHERLANDS<br>TCC<br>P.O Box 18600,<br>2502 EP Den Haag | NORWAY<br>TCC<br>P.O.BOX 1699 Vika,<br>0118 Oslo. | SWITZERLAND<br>WTTC<br>Joses Str - 110,<br>8005 Zurich. | SWEDEN<br>TCC<br>Glomminge Grand 25,<br>3rd Floor,<br>16362 Spanga. | UNITED KINGDOM<br>UTO<br>Eelam House,<br>202 Long Lane,<br>London SE1 4QB | U.S.A<br>W.T.C.C<br>170-10 Cedarcroft Road<br>Suite 1-L, Jamaica<br>New York 11432. |




# சிறீலங்கா கொண்டாடும் நவகாலனித்துவத்தின் பொன்விழா

சிறீலங்கா அரசாங்கம் இவ் ஓகஸ்ட் மாதம் 28, 29 இல் தான் கல்லோயா அபிவிருத்தி திட்டம் என்ற பெயரில் நவகாலனித்துவத்தை தமிழீழ மண்ணில் ஆரம்பித்த 50வது ஆண்டினைப் பொன் விழாவாக கொண்டாடி மகிழ்கின்றது.

கல்லோயா அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையில் தமிழீழத் திருநாட்டின் வளங்கொழிக்கும் மட்டக்களப்பு மாவட்டம் அம்பாறை மாவட்டம் என்ற பெயரில் துண்டாடப்பட்டு 1949இல் அரச ஆதரவுடனான சிங்களக் குடியேற்றத்துக்கு உட்படுத்தப்பட்டது. இதன் மூலம் காலனித்துவம் விலகினால் தமது சுதந்திரம் தம்மிடம் மீளும் என்ற நம்பிக்கையுடன் காலனித்துவத்தின் விலகலுக்கு போராடிய தமிழ் மக்கள் மேல் மற்றொரு நவ காலனித்துவம் திணிக்கப்பட்டது.

இந்த அரசஆதரவுடனான நவகாலனித்துவ சிங்களக் குடியேற்றங்கள் தமிழர்களின் தாயகத்தினை சிங்களமயப்படுத்தல்-அதன் மூலம் இலங்கைப் பாராளுமன்றத்தில் தமிழர்களுக்கு இருந்து வந்த பிரதிநிதித்துவ விகிதாசாரத்தை மாற்றி தமிழ் மக்களை சட்டவாக்கத்தில் பங்குபற்ற விடாது தடுத்தல்-தமிழ் மக்களின் தாயகத்தை காலனித்துவம் வழங்கிய சிங்களப் பெரும்பான்மையைக் கொண்டு சட்டரீதியாக ஆக்கிரமிப்பது என்ற பேரினவாத நோக்குதனை நிறைவேற்றுவதற்கான களத்தை அமைத்துக் கொடுத்தது.


காலனித்துவம் விலகுவதற்கு சற்று முன்பாக 1946 இல் 5.9 வீதமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்த சிங்களவர் தொகை 1971இல் 17.7 வீதமாக மாற்றப்பட்டது. திருகோணமலையில் 1921 இல் 3 வீதமாக இருந்த சிங்களவர் தொகை தொடர்ச்சியான காலனித்துவங்களால் 1971இல் சரியாக 50 ஆண்டுகளில் 28.8 வீதமாக உயர்த்தப்பட்டது. தமிழர்களின் தாயகத்தை சிங்கள பௌத்த பேரினவாத ஆதரவு அரசாங்கம் காலனித்துவம் வழங்கிய பெரும்பான்மைப் பாராளுமன்றத்தின் துணை கொண்டு சிங்களமயப்படுத்தி இலங்கைத் தீவில் தமிழர்களை அவர்களது சொந்தத் தாயகத்திலேயே இரண்டாந்தர பிரஜைகள் ஆக்கியது. தமிழர்களின் விவசாய கடல் வளப் பிரதேசங்களில் சிங்கள அரசாங்கத்தின் ஆதரவுடன் குடியேறிய சிங்களவர்கள் அங்கு வரலாற்றுக்கு முன்பிருந்து வாழ்ந்து வந்த தமிழர்களை வன்முறைகள் மூலம் விரட்டி தங்கள் நிலங்களை அகலப்படுத்த அவ்வாறு சட்டவிரோதமாக அபகரிக்கப்பட்ட நிலங்களை அந்தச் சிங்களவர்களின் சொந்தமாக்கி காணி உறுதிகளை வழங்கி அவர்களுக்கு சட்டபாதுகாப்பு கொடுக்கும் செயலில் சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்கள் தொடர்ச்சியாக ஈடுபட்டன.

சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்கள் தமிழர்கள் மேல் இனத்துன்புறுத்தல்களை இனஅழிப்புக்களைச் செய்வதன் மூலம் அவர்களது அரசியல் பணிவை பெறலாம் என்பதை தமது அரசியல் போக்காக வெளிப்படுத்தத் தொடங்கின. புத்தர் பிறந்த 2500 ஆவது ஆண்டான 1956 ஐ சிங்கள அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிரான இனவெறுப்பினை வளர்க்கும் ஆண்டாக மாற்றியது. சிங்களவர்கள் பௌத்த சிங்கள நாடாக இலங்கையை மாற்ற வேண்டிய நேரம் வந்து விட்டதாக ஜயவர்த்தனா கொக்கரித்தார்.

தமிழர்களை சிங்களவர்கள் இடும் கட்டளைக்கு அடிபணியும் அடிமைகளாக கருதி, 05.06. 1956இல் சிங்களம் மட்டும் சட்டத்தை பண்டாரநாயக்கா கொண்டு வந்து சிங்கள பௌத்த பேரினவாத வெறிக்கு நெய்வார்த்தார். பௌத்தத்தை பேணுவது இலங்கை அரசாங்கத்தின் முதன்மைப் பணியாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. புத்தரின் 2500ஆவது பிறந்த ஆண்டில் புத்த பிக்குகள் புத்தரின் பெயரால் தமிழர்களின் உயிர் அழிவுகளுக்கு தூபமிட்டனர். பௌத்த பிக்குவைத் தலைவராக கொண்ட சிங்களக் காடையர் கும்பல் ஒன்றினால் காலிமுகத்திடலில் சிங்களம் மட்டும் சட்டத்தினை எதிர்த்து சாத்வீக வழியில் நடாத்தப்பட்ட சத்தியாக்கிரகம் குழப்பப்பட்டு வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. தாங்கள் எதைத் தமிழர்களுக்கு செய்தாலும் சிங்கள அரசாங்கத்தால் தமக்கு சட்டப்பாதுகாப்பு உண்டு என்று உணர்ந்த சிங்களக் காடையர்கள் கல்லோயாவில் அப்பாவித் தமிழ் மக்கள் மேல் இனத்துன்புறுத்தல், இனஅழிப்புக்களை கட்டவிழ்த்து விட்டனர். இவைகளின் விளைவாக 156 தமிழ் மக்கள் இனக்கொலைக்கு உள்ளாக்கப்பட்டனர். சிங்களக் குடியேற்றவாசிகள் அருகில் உள்ள தமிழ்க் கிராமவாசிகளை பகிரங்கமாக இனக் கொலைகளுக்கும் இனத்துன்புறுத்தல்களுக்கும் ஆளாக்கத் தொடங்கினர். இவ்வாறாக சிங்களவர்கள் தமிழர்களை அழிப்பதினால் தங்கள் தேசியத்தை- ஆற்றலை வளர்க்கலாம் என்ற எண்ணம் அரசியல் தத்துவமாக மாறத் தொடங்கியது. இதன் அறுவடையாக 1958 தமிழ் இனஅழிப்பு அமைந்தது. தொடர்ந்து காலத்திற்கு காலம் நடாத்தப்பட்ட இனத்துன்புறுத்தல்களின் வெள்ளி விழாவாக 1983 இன அழிப்பு தொடர்ந்தது.

ஆயினும் சிங்களத் தேசியத்தின் வெறித்தனங்கள் தமிழ் மக்களிடை எதிர் நிலைகளைத் தோற்றுவித்தது. 03.09.49 இல் 1619ஆம் ஆண்டில் போர்த்துக்கேயரினால் இறக்கப்பட்ட யாழ்ப்பாண அரசின் நந்திக் கொடியை தமிழ்த்தேசியத்தின் சின்னமாக நல்லூரில் ஏற்றினர். தமிழரசு ஒன்றின் தேவை பேசப்படத் தொடங்கியது. ஆனாலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை தோன்றும் வரை தமிழ்த் தேசியம் போராடும் ஆற்றல் அற்று மன்றாடிப் பெறுவது சுதந்திரம் என்ற காலனித்துவ சிந்தனைவழி செயற்பட்டு இலங்கைத் தமிழர்கள் மேலும் மேலும் அடிமை நிலைக்கு தள்ளப்பட்டனர். இதன் உச்சக்கட்டமாக 1972 முதல் இலங்கைத் தமிழர்களை சிறீலங்கா என்னும் அந்நிய அரசாங்கத்தின் மூலம் ஆட்சி செய்யும் தன்மையை சிங்கள பௌத்த பேரினவாதம் உருவாக்கியது. தமிழ் சிங்கள அரசுகளை இணைத்து காலனித்துவம் உருவாக்கிய இலங்கை அரசாங்கம் என்ற ஒற்றையாட்சி அமைப்பையும் காலனித்துவத்தின் விலகலின் பொழுது அவ்வமைப்பில் தமிழர்கள் தொடர்ந்து ஜனநாயக ரீதியில் அச்சமின்றி பங்குபற்றுவதற்கு காலனித்துவம் விதித்த 29 (2) என்ற சோல்பரி அரசியல் அமைப்பு நிபந்தனையையும் மீறி சிறீலங்கா என்ற சிங்கள பௌத்த குடியரசை தமிழர்கள் மேல் 1972இல் திணித்தது. இதற்கு ஜனநாயக வழிகளில் தமிழர்கள் காட்டிய எதிர்ப்புக்களை எல்லாம் ஆயுத ஒடுக்குமுறைகள் மூலம் அடக்க முனைந்தது. இதனால் தமிழர்கள் தங்கள் பிறப்புரிமையாம் சுயநிர்ணய உரிமையினைப் பிரயோகித்து தம்மை தமிழீழ மக்களாக மீளவும் வெளிப்படுத்தி தங்கள் வரலாற்றுத் தாமாக தனி இறைமையுடன் விளங்கி காலனித்துவத்தால் சிங்கள அரசுகளுடன் இணைக்கப்பட்டு காலனித்துவ விலகலின் பின் சிங்களப் பெரும்பான்மை தோற்றுவித்த நவகாலனித்துவத்தால் ஜனநாயக தன்மைகள் மறுக்கப்பட்டு சிங்கள பௌத்த பேரினவாதம் உருவாக்கிய அந்நிய அரசான சிறீலங்காவால் அதன் ஒரு பகுதியாக அபகரிக்கப்பட்டுள்ள தமிழீழத் தேசத்தை மீள் அமைக்கும் முடிவை குடியொப்பத்தின் மூலம் 1977இல் உலகிற்கும் சிங்கள மக்களுக்கும் பகிரங்கப்படுத்தினர். 1977 தேர்தலில் தாம் தெரிவு செய்யும் பிரதிநிதிகள் தமிழீழ அரசியல் அமைப்பு நிர்ணய சபையாக செயற்படுவர் எனவும் அதனை ஜனநாயக வழிகளில் அடைய முடியாவிடின் போராடியாவது பெறுவர் எனவும் அத் தேர்தல் மூலம் உலகிற்கு உறுதிப்படுத்தினர். இந்த சுயநிர்ணய உரிமைப் பிரகடனத்தை ஏற்கமறுத்த சிறீலங்கா தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையினை ஆயுதப் படைபலம் கொண்டு தடுத்து தமிழ் மக்களின் ஜனநாயக விருப்புக்கு எதிராக ஆக்கிரமிப்பு ஆட்சி ஒன்றை தமிழ் மக்கள் மேலும் அவர்களின் தமிழீழத் தேசத்தின் மேலும் நிறுவினர். இதனை தமிழ் மக்களும் ஆயுதப் போராட்டத்தின் மூலம் தடுக்க முயன்று சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக தங்கள் தேசிய விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளை தோற்றுவித்து தங்கள் உடைமையும் தங்கள் தேசத்திறைமையும் தேசிய பாதுகாப்பை நிறுவிக்கொள்ள விழைந்து வருகின்றனர். இதனை படையெடுப்புக்கள் மூலம் அழிக்க முயன்ற சிறீலங்கா அதன் உச்சக்கட்டமாக 1983இல் நாடற்ற தேச இனமாகத் திகழ்ந்த தமிழ் மக்கள் மேல் மக்கள் மீதான யுத்தத்தை பிரகடனப்படுத்தி அவர்களை இன அழிப்பு செய்வதையும் அவர்களது தமிழீழத் தேசத்தின் உட்கட்டுமானங்களை உருக்குலைப்பதையும் இன்று வரை தொடர்ந்து வருகிறது.

இந்நிலையில் கல்லோயா திட்டத்தின் பொன் விழாவை சிறீலங்கா சிங்களத் தேசியத்தின் விழாவாக கொண்டாடி இலங்கைத் தீவு சிங்களவர்களின் தேசம் என்ற தனது பௌத்த சிங்கள பேரினவாத சிந்தனைக்கு நீராராதனை செய்வதில் எந்த வியப்பும் இல்லை. அப்படியானால் தமிழீழ மக்களும் 1619இல் காலனித்துவத்தால் இறக்கப்பட்ட தமிழீழத்தின் யாழ்ப்பாண அரசின் கொடியை 03. 09. 49இல் 330 ஆண்டுகளின் பின் மீளவும் ஏற்றி தமது தமிழ்த் தேசியத்தை மீளவும் தமிழரசாய் பார்க்கத் தொடங்கிய உணர்ச்சியின் பொன் விழா ஆண்டாக இவ்வாண்டை கருதி அந்த உணர்ச்சிக்கு உணர்வூட்டமாக வடிவம் கொடுத்து தாயக மீட்புக்கு, தேச விடுதலைக்கு போராடி வரும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நம்மாலான அனைத்து உதவிகளையும் செய்து பிறக்கப்போகும் 2000 ஆம் ஆண்டில் தமிழீழம் மீளவும் மீட்கப்பட்ட தேசமாக இலங்கச் செய்வோமாக! தமிழர்கள் பாதுகாப்புள்ள அமைதி வாழ்வு பெற அவர்கள் தமிழீழத் தேசத்தின் தரை, கடல், வான் பாதுகாப்புடன் ஓங்குவதற்கு இன்றே ஏற்றவை செய்வோமாக!



# 1998 மார்கழி ஒட்டுசுட்டான் இடப்பெயர்வு

## நடந்த அவலங்களில் ஒன்று

சென்ற ஆண்டு மார்கழி மாதம் பாடசாலைகளும், கோயில்களும் தேவாலயங்களும் மக்களின் வதிவிடங்களானது. சமாதானத்திற்கான யுத்தம் என்றும் தரை வழிப்பாதை திறப்புக்கான போர் என்றும் பல முனைகளினாலும் கோரத்தாண்டவம் ஆடப்புறப்பட்ட சிங்கள அரச படைகளின் கொடூரப் பசிக்கு தம் அழகிய வாழ்விடங்களை, கல்வியை, கலைபண்பாட்டுடன் கூடிய வாழ்க்கை முறையை, சொத்துக்களை, சுகங்களைப் பெற்றார் பிள்ளைகளையும் பிள்ளைகள் பெற்றாரையும் சொந்தங்களையும் இழந்துவிட்டு ஏதிலிகளாக அவதிப்பட்டு துன்பப்பட்டுக் கொண்டிருந்தனர்.

இருபத்தைந்து மாதங்களுக்கு முன்னர் ஜெயசிக்குறுய் என்ற சிறீலங்கா இராணுவத்தின் பாதைதிறப்பு நடவடிக்கையால் இராணுவத்தின் எறிகணை வீச்சுக்களுக்கும் விமானங்களின் குண்டு மழைகளுக்கும் பயந்து கையில் அகப்பட்டவற்றுடன் தம் வாழ்விடங்களை விட்டு வெளியேறிய மக்கள் மீண்டும் தம் இடங்களுக்குச் சென்று வாழ்வோட்டத்துடன் இரண்டறக்கலந்து கொண்டு மண்ணை வளப்படுத்திச் செழிக்க வைத்துக் கொண்டிருக்கும் போது அடுத்த இடப் பெயர்வு.

இரவோடு இரவாக ஆரவாரம் எதுவுமின்றி மிகவும் அமைதியாக ஷெல் வரும் முன்னே ஆமி வரும் பின்னே என்ற எமது மக்களின் நினைவுகளைப் பொய்யாக்கிக் கொண்டு 1998.12.03 அன்று ரிவிபல என்ற புதிய பெயருடன் ஒட்டுசுட்டானுக்குள் புகுந்தது சிங்களப்படை. இரவு மினிசினிமாவில் படம் பார்க்கச் சென்ற

### உலகமங்கை

வர்கள், வரப்போகும் சாதாரணதரப் பரீட்சைக்குச் சேர்ந்து படிக்கச் சென்ற மாணவர்கள், கடைகளுக்குச் சென்றவர்கள், வீடுகளில் உறங்கிக் கொண்டிருந்தவர்கள் என ஏறத்தாள நாலூறுக்கு மேற்பட்டோர் சிங்களக் கூலிப்படைகளின் கரங்களில் சிக்கித்தவிக்க, வருவது வரட்டும் செத்தால் சாகின்றோம் தப்பினால் தப்புகின்றோம் என்று படைகளின் பிடியில் இருந்து சிலர் ஓடி வந்தனர். இவர்கள் மூலம் செய்தி அறிந்த அயல்க்கிராமங்கள் கையில் அகப்பட்டவற்றுடன் பக்கத்து ஊர்களை நோக்கி தலைகளிலும், மிதிவண்டிகளிலும் சுமைகளுடனும் மனதில் பாரத்துடனும் நடக்கத் தொடங்கினர்.

மார்கழி மாதம் ஒட்டுசுட்டான், முத்தையன் கட்டு மண்செழிப்புறும் காலம். பச்சைப் பசேலென தங்களது உழைப்பால் சிரித்துக் கொண்டிருக்கும் தம் நிலத்தை விட்டுப் பதினோராயிரம் நெஞ்சங்கள் சுமையுடன் நடந்தன. மக்களுடன் சேர்ந்து ஆடு மாடுகளும், கோழிகளும் கூட இடம்பெயர்ந்தன. அவை செய்த பாவந்தான் என்ன? தமிழர்களின் வீடுகளில் பிறந்ததுதான் அவை செய்த பாவமா?

பாடசாலைகளிலும் ஆலயங்கள் கோவில்களிலும் தஞ்சம் புகுந்தாயிற்று. உணவுக்கு என்ன செய்வது? மக்கள் முன் பூதாகரமாக எழுந்து நின்றது கேள்வி. நிவாரண வெட்டால் பாதிக்கப்பட்டவர்கள் தம் நிலத்தைக் கிளறிப்பயன் பெறும் நேரம் அரசின் திட்டமிட்ட செயற்பாட்டால் துரத்தப்பட்டு அடுத்த நேர உணவுக்கு அல்லாடும் ஒரு நிலைக்கு தள்ளப்பட்டனர். பத்து நாட்களாக அரச சார்பற்ற நிறுவனங்களான பெண்கள் அபிவிருத்திப்புனர்வாழ்வு நிறுவனம், உழைக்கும் மகளிர் நிறுவனம், வடக்குக் - கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம், சமூக மேம்பாட்டு நிறுவனம் போன்ற சில நிறுவனங்கள் சமைத்த உணவுகளை வழங்கின. பாடசாலையின் கூரைகளின் கீழ் மக்களும் பாடசாலைவளாக மர நிழல்களின் கீழ் மாணவர்களின் கல்வியுமாக நாட்கள் நகர்ந்தன. சாதாரணதரப் பரீட்சை நாளும் நெருங்கிக் கொண்டிருந்தது. காலம் தப்பிப் பெய்யும் மழையும் இந்தா அந்தா என பயமுறுத்திக் கொண்டிருந்தது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் கொடுத்த கூரை விரிப்புக்களுடன் காடுகளை நோக்கிச் சென்ற மக்கள் காட்டு மரங்களின் இடையே கூரைவிரிப்புக்களைப் போட்டு அமர்ந்து கொண்டனர்.

மழை கொட்டத் தொடங்கியது. தொடர் மழை. ஒருகிழமையாக விடாத மழை வெள்ளம் பாயத் தொடங்கியது. கூடாரங்களின் கீழ் இருந்து தாக்குப் பிடிக்க முடியாமல் திரும்பவும் பாடசாலைகளில் தஞ்சம் புகுந்தனர். ஆனால் வயிற்றுப் பசிக்கு என்ன செய்வது?

முத்தயன்கட்டு ஜீவ நகர் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து கைவேலியில் கூரைவிரிப்பால் இருப்பிடம் அமைத்திருக்கும் ஏழு பிள்ளைகளின் தாயொருவர்.' ஊரில இருக்கேக்க நான் என்ர பிள்ளைகளுக்கு ஒரு நேரச்சாப்பாடு கூட குடுக்காம விடேல்ல. இப்ப என்ர பிள்ளையள் இரண்டு நாளா சாப்பாடு இல்லாமல் கிடக்குதுகள் இன்னும் புத்துதான் பொறுத்திருந்தா சோனன் பிடுங்கியிருப்போம். பேந்து கௌபி, பயறு, மரவள்ளி, நெல்லு என்டு வீட்டுக்குள்ள குறையாமச் சாப்பாடு இருக்கும். அதற்கிடையில நாசமறுப்பான் நாசமறுத்துப் போட்டான். இப்ப என்ர பிள்ளையள் பசியால துடிக்குதுகள் செஞ்சிலுவைச் சங்கம் தந்த பாய், வாளி, உடுப்பு எல்லாம் வித்துக் கடைசியில் மாத்திக்கட்டக் கொண்டு வந்த துணியளக் கூட வித்தம். இனி நாங்க என்னத்தை விக்கிறது? விம்மலோடு வெடித்தாள்.'

பக்கத்துக் கூடாரத்தில் ஒட்டிய உலர்ந்த வயிற்றுடன் டசின்கணக்கான கண்களில் தெரிய தாயின் மடியிலும் அவளைச் சுற்றியும் அமர்ந்திருந்தனர் பிள்ளைகள். அப்போதுதான் ஒரு மரவள்ளிக்கிழங்கை எடுத்துச் சுட்டு ஆறு பிள்ளைகளுக்கும் கொடுத்துவிட்டு சிறு ஆறுதலுடன் இருந்த அவளிடம்,

அம்மா.... கஞ்சி வைச்சத்தாம்மா.... கஞ்சி வைச்சத்தாம்மா.... என்று அழத் தொடங்கினான் சிறுவன். கலங்கிய கண்களுடன் கனத்த மனத்துடனும் அவ்விடத்திலிருந்து பிள்ளையுடன் அகன்று விட்டாள் அந்த அன்னை.

'என்ர மனுசன 86ஆம் ஆண்டு ஒட்டுசுட்டானில் வச்சு ஆமி சுட்டுப்போட்டுது. நான் கூலி வேலை செய்தும் தோட்ட வேலை செய்தும்தான் என்ர பிள்ளையளை வளர்த்தனான். ஒரு நேரம் கூட சாப்பாட்டுக்கு கஸ்ரப்படேல்ல. இப்ப ஒரு நேரக் கஞ்சிக்கே வழியில்லாமக்கிடக்குது. நிவாரணமும் தாறாங்களில்ல. ஒரு மாதமாய் தரயில்லத்தான். ஆனா மண் இருந்தது. உழைச்சுச் சாப்பிட்டம். இஞ்ச என்ன செய்யிறது. என்ன வேலைக்குப் போறது.?'

இதுவும் ஜீவநகரில் இருந்து இடம் பெயர்ந்து வாழும் ஒரு தாயின் குரல். மானிப்பாயிலிருந்து சாவகச்சேரிக்கும் சாவகச்சேரியில் இருந்து கிளிநொச்சிக்கும் அங்கிருந்து ஒட்டுசுட்டானுக்கும் வந்து ஜெயசிக்குறுய் ஆல் இடம்பெயர்ந்து பேராற்றில் வசித்து அங்கிருந்து ரிவிபல நடவடிக்கையால் புதுக்குடியிருப்புக்கு இடம் பெயர்ந்து இடம்பெயர்வே வாழ்வாகிப்போன ஒரு தாயார்.

'அவன்தான் எங்கள இருக்க விடாம ஓடஓடத் துரத்திறான் என்டால் மழை கூட இருக்க விடேல்ல. பள்ளிக்கூடத்தில இருந்து சோதினை தொடங்கப்போறன்றபடியால் தறுப்பாள் தந்து விட்டினம். நாங்களும் போய் இருந்தால் மழை தண்ணி, ஒரே வெள்ளம் என்ன செய்யிறது திரும்பி வந்து பள்ளிக்கூடத்தில இருக்கிறம். மழையும் விடுறதாக் காணேல்ல?'

இன்னுமொரு தாயின் அங்கலாய்ப்பு –

'வளர்ந்த பொம்பிளைப்பிள்ளையளை வச்சுக் கொண்டு நாங்கள் படும் கஸ்டம் பெரும் கஸ்டம். குளிக்கிறதுக்கு இஞ்சேருந்து ஒரு மைல் தூரம் நடந்து மஞ்சள் பாலத் தடிக்குப் போகவேணும். இப்ப வாய்க்கால் வழிய தண்ணி ஓடுறதால பிரச்சனையில்லை. றோட்டுக்கரை ஒரு மறைப்பும் இல்லை. ஊரில என்டா கத்தி அடைச்ச மறைப்பு, என்ன செய்யிறது. எல்லாம் ஊரோட போச்சுது. இப்ப இதுகளையெல்லாம் பார்த்தா வாழ ஏலாது.'


இராணுவத்தின் பிடியிலிருந்து தன் சகோதரர்களுடன் தோளில் புத்தகப்பையுடன் தப்பி வந்து நூறாம் ஆண்டு மாணவன் –

'நெடுங்கேணி றோட்டில எங்கட வீடு ஆமி வந்தப்பிறகுதான் எங்களுக்குத் தெரியும் சிவன் கோவிலடிக்கு வரச் சொல்லிப்போட்டு போட்டான். நாங்கள் பின் காணிகளுக்குள்ளால வந்து வாய்க்கால்களுக்குள்ளால ஓடி முள்ளியவளைக்கு வந்திட்டம். நாங்கள் வாய்க்கால்களுக்கால வரும் றோட்டில ஆமி ஆட்களைக் கூட்டிக் கொண்டு போறான். நாங்கள் அப்படியே படுத்திட்டம் அப்படியே படுத்திட்டு ஓடிவந்திட்டம்.'

இவை எம்மண்ணில் தொடரும் அவலங்களினதும் முகாம் வாழ்க்கையினதும் ஒரு சிறிய பக்கம். சன நெருக்கடிகள் சுகாதாரச் சீர்கேடுகள் அண்மையில் எட்டிப்பார்த்த கொலரா நோயின் தாக்கம் மீண்டும் தலைதூக்குமோ என்ற அச்சத்துடன் எப்போது நிவாரணம் கிடைத்து, தம் வயிறு குளிரும் என்ற ஏக்கத்துடனுமே அம்மக்களின் பொழுது கரைந்து கொண்டிருக்கிறது.

இங்குள்ள பற்றாக்குறைகளையும் மக்கள் பட்டினிச்சாவை எதிர்கொள்ளும் நிலைமையையும் அரச நிறுவனங்களும் உலக செய்தி நிறுவனங்களும் உரத்துக் கூறியும் சந்திரிகா அரசு காது கொடுத்துக் கேட்கவில்லை.

வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களும் சிறீலங்கா அரசுடன் கதைத்து எதுவித பயனும்இல்லை என்று வாய் மூடி மௌனியாகிவிட்டது. அவர்கள் வழங்கும் பாயும் வாளியும் கூரை விரிப்



புக்களும் மக்களின் சிறு தேவையை நிறைவு செய்தாலும் வயிற்றுப்பசியைப் போக்குவார் யார்? இங்கு இப்போது உணவும் வதிவிடமுமே முக்கியமான பிரச்சினைகளாகும். இதையார் தான் உணர்வார்?

சமாதானத்திற்கான யுத்தம் என்ற பெயரில் சந்திரிகா அரசு மக்களைப் பட்டினிச்சாவுக்குள் தள்ளுகின்றது. தம் சொந்த மண்ணிலேயே வயிறார உண்டு உறங்கி வாழ்ந்த மக்களின் நிலை இன்று ஒரு நேரக்கஞ்சிக்கே வழியில்லாத நிலை. யுத்தமே குறியாக யுத்தத்தாலேயே மக்களை ஏதிலிகளாக்கிய சிறீலங்கா அரசு மக்களின் நல்வாழ்வையும் பொருளாதார முன்னேற்றத்தையும் கருத்தில் எடுக்காது என்பதை உலக நாடுகளும் அறியும். எம்மக்களின் துயர்களைத் துடைப்பார்களா?

எப்போது எம்மக்கள் சொந்தமண்ணில் சொந்த வீட்டில் சுதந்திரமாக மனம் நிறைந்த வாழ்வு வாழ்வார்களோ அதுவரையில் அவர்களது அவலங்கள் ஓயப்போவதில்லை.

நன்றி: சுதந்திரப் பறவை



ஆய்வு

# தமிழின அழிப்பே ஒரே நோக்கம்.

பிரித்தானிய அரசின் இறுதிக்கால கட்டத்திலிருந்து இன்று வரையிலான சிங்கள ஆட்சியின் ஒரே இலட்சியம் தமிழினத்தை பூண்டோடு அழித்து வேரோடும் வேரடி மண்ணோடும் 'கெல்லி' எறிவதும் இலங்கையில் ஒரே இனமொன்றை ஒரே மதமொன்றை உருவாக்குவதும் நாட்டை ஒரு பௌத்த சிங்கள தனி இராட்சியமாக்குவதுமே ஆகும்.

இந்த கைங்கரியத்திற்கு அறிவாற்றலுள்ள தமிழ் பிரமுகர்களை பயன்படுத்துவதும் அவ்வாறு பயன்படுத்துவதன் மூலம் தமது நாட்டில் இரு இனங்களுக்கிடையே எவ்வித இன பிரதேச பேதமில்லை என்பதை வெளி உலகுக்குக் காட்டும் அரசியல் சாணக்கியம் திரு. பொன்.இராமநாதன், திரு.பொன்.அருணாச்சலம் காலத்திலிருந்து இன்றைய அரசியல் கையாள் கதிர்காமர் வரை நீடிப்பதைக் காணமுடியும்.

நாட்டில் வெள்ளையர் காலத்தில் தமக்கு எவ்வித அதிகாரங்களும் அற்ற நிலையில் இருந்த சிங்கள உயர்மட்ட வட்டாரம் சில அதிகாரங்களைப் பெறுவ

**அகில நாயகன்.**

தன் மூலம் மேலதிகாரத்தைப் பெறுவதும் சுதந்திரமாக தம் சுரண்டலைத் தொடர்வதற்கும் நாட்டில் எஜமானர்களாக வாழ்வதற்கும் வழி திறக்கும் என்பதை மட்டுமே கருத்தில் கொண்டுகுழுக்களை அமைத்து லண்டன் அரசுடன் விண்ணப்பப்போராட்டம் நடத்தியதே தவிர நாட்டின் பொது அபிலாசைகளுக்காக அல்ல. அதற்குத் தமிழர்களான மேற்குறிப்பிட்ட தமிழ்ப் பிரமுகர்கள் எவ்வளவு பயன்படுத்தப்பட முடியுமோ அவ்வளவுக்குப் பயன்படுத்தப்பட்டார்கள்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் தாக்கத்துக்கு முகங்கொடுக்க முடியாத காரணத்தாலும் இரண்டாவது உலக மகாயுத்தத்தின் கனையை மார்பில் வாங்கிக் கொண்டதாலும் பிரித்தானிய அரசு தனது காலனி நாடுகளுக்கு சுதந்திரம் வழங்கிய போது இலங்கைக்கு அது ஓசியில் (அடுத்தவர் முயற்சியில்) கிடைத்தது.

இதனைக் கையேந்திக் கொண்ட சிங்களத் தலைவர்கள் அடுத்த வினாடியிலிருந்தே தமிழினத்தை கருவறுக்கும் நீண்டகால அபிலாசையை நிறைவேற்றத் தயாரானார்கள். டீ.எஸ்.சேனநாயக்காவின் அரசு அதனைச்சாதித்தது. அங்குரார்ப்பணம் செய்து வைத்தது.

நீர்வளமும் நிலவளமும் காட்டுவளமும் ஒருங்கே அமைந்த கிழக்கு மாநிலம் 'சீர்திருத்தம்', 'அபிவிருத்தி', 'அதிக உணவு பயிரிடுக' என்ற சுலோகங்களைத் தாங்கி நிலப்பறிப்புக்கள் ஆரம்பமாகி ஆக்கிரமிக்கப்பட்டன. தமிழரின் பாரம்பரிய பிரதேசமாகிய பட்டிப்பளை கல்லோயாவாக சிங்கள நாமம் பூண்டு சிங்களக் குடியேற்றம் நிரப்பப்பட்டது. ஏமாந்த அன்றைய தமிழ் உதிரிகள் சிலரும் ஓகோ ஆகா என்று இதனை வரவேற்றதோடு தமிழ்ப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்துதர வைப்போம் என்று மார் தட்டியும் கொண்டார்கள்.

இதனைத் தொடர்ந்து பல நூற்றுக் கணக்கான விவசாய மேட்டுநிலக்குடியேற்றங்களும் புயல் வேகத்தில் கிழக்கில் நிகழ்ந்தன. நிகழ்கின்றன. சிங்கள அரசின் தலைமைகள் மாறிமாறி வந்தனவே தவிர பௌத்த சிங்களத்தின் இலட்சியமான சிங்கள இராட்சியம் மெதுமெதுவாக நிலை நிறுத்தும் நடவடிக்கைகளே சகலராலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் வழி வழிவந்த மரபு நிலையில் நிற்கும் சந்திரிகா பாதை மாறி புதிய வழிநிற்பார் என்று எண்ணுவதும் நம்புவதும் எவ்வாறு யதார்த்தமாகும் அரை நூற்றாண்டுகால பௌத்த சிங்கள ஆட்சியில் தோற்றுப்போன நம்பிக்கை இழந்துபோன மக்களிடையே மீண்டும் நம்பிக்கையை தோற்றுவிக்கப் போவதாக 'ஒட்டுப் பிளாஸ்டர்' வேலை செய்வதன் மூலம் நம்பிக்கைகளைப் புதுப்பிக்க எண்ணுவது கோமாளித்தனமே. லட்சோப லட்சம் மக்களை சொந்த வாழ்விடங்களை விட்டு அடித்துக் கொன்று துரத்திய மூர்க்கர்கள் இப்போ மீண்டும் மக்கள் மீது அன்பு கொண்டு அரவணைப்பது போல் பம்மாத்துப்பண்ணுவதை தமிழினம் நம்பத்தயாரில்லை.

யாழ்ப்பாண மண்ணில் அரச பயங்கரவாதிகளின் பேயாட்சியில் அடியுதை வாங்கி அவதியுற்றவர்களைவிட 600க்கும் மேலான அப்பாவி இளைஞர்கள், யுவதிகள் கைதாகிக் காணாமற்போயினர். இவர்கள் என்ன விடுதலைப்புலி உறுப்பினர்களா? கொழும்பிலும் மற்றைய பிரதேசங்களிலும் கைதாகி சிறையிலும், சித்திரவதைக் கூடங்களிலும் அவதியுறும் ஆயிரமாயிரம் அப்பாவிகள் விடுதலைப் புலிகளா? இவைகள் யாவுமே தமிழினத்தை அழித்தொழிக்கும் நோக்குடனே சிங்கள அரசு மேற்கொள்ளும் அராஜகமாகும்.

இதிலிருந்து நமது மக்கள் ஒன்றைப் புரிந்து கொள்ளவேண்டும். நாம் எவ்வளவு தான் நல்லபிள்ளைகளாக நம்மைக் காட்டிக் கொண்டாலும் நாம் தமிழர்கள் என்பதை சிங்களத்தைவிட்டு ஒதுக்கித் தள்ளப்பட வேண்டியவர்கள் என்பதையே அரக்க சிங்களம் தீர்மானித்துவிட்டது. இதனால் ஒவ்வொரு தமிழரும் சிங்களச் சிலந்திவலையில் என்றாவதொரு நாள் சிக்கியே ஆகவேண்டும்.



இன்றைய காலமானது தமிழினத்துக்கு ஒரு சோதனை மிகு காலமாகும். அதேவேளை அடிமை இருள் கலையும் புத்தொளி பிரகாசிக்கும் ஒரு பொன்னான கால கட்டமுமேயாகும். இன அழிவையும் தேசிய அழிவுகளையும் தடுத்து நிறுத்த நமக்குரிய சுதந்திர தேசத்தை நிலை நிறுத்த ஜீவ மரணப்போர் ஓங்கி எழுந்த காலம்.

இந்தக் காலகட்டத்தில் நமது நிலை என்ன? அழிக்க வந்த சிங்களத்தோடு அண்டி நடந்து அழிவதா அல்லது மானத்தோடு போராடி தேசம் காக்க முனைவதா என்பது சிந்திக்கப்பட வேண்டியதே.

போலித்தனமாக அரசியல் தீர்வுப் பொதியொன்றை சுமந்து இது கால வரை காலத்தைக் கடத்தி நாடகமாடி வரும் சிங்கள அரசு அதன் மூலம் என்ன தீர்வைத் தரப்போகிறது. குடியேற்றப்பட்ட குடியேற்றங்களை வாபஸ் பெறப் போகிறதா? வடக்குக் கிழக்கை இணைத்து தமிழரின் பிரதேசத்தை அவர்கள் கையில் தூக்கி வைக்கப்போகிறதா குலைந்து அழிந்து போன அமைதியை மீளப்பெற இராணுவ நிலைகளை வாபஸ் பெறப் போகின்றதா? இதற்கெல்லம் தீர்வுப் பொதி தீர்வு கட்டப்போவதில்லை. இப் பொதியானது உலகை ஏமாற்றும் சந்திரிகாவின் காலம் கடத்தும் மாயையே. இத்தகைய காலக்கடத்தலே சிங்கள அரசுகளின் பாரம்பரியமாகும்.


இந்த நிலையில் நமது போரிடும் சக்தியொன்றே நமது வாழ்வியல் பிணியைத் தீர்க்கும் மாமருந்தாக முடியும். நமது போராடும் சக்தியானது இமயமென நிமிர்ந்து நிற்கும் காலம் இன்றைய பொற்காலம். அன்று இராணுவத்தையும் அதன் பாரிய ஆயுதப்படைகளையும் கண்டு விலகி நின்றார்கள் விடுதலைப் புலிகள். ஆனால் இன்று யுத்த டாங்கிகள் புலிகள் பாய்ச்சலில் முட்டைகள் போல் நொருங்குகின்றன. ஆயிரக்கணக்கான மக்களையும் போராளிகளையும் அழித்தொழித்த அரச விசைப்படகுகள் கடலில் ஆழத்தை அளக்கிறது. அன்று நமது வானில் வட்டமிட்டு வாழ்வை அழித்து வந்த விமானங்கள் எத்தனையோ நமது மண்ணில் வீழ்ந்து நொருங்கின. இன அழிவைத் தொடர ஊருக்குள் புகுந்த சிங்களப் படை சிதைந்தழிந்து பின்வாங்குகின்றது. போராட முடியாமல் ஒழித்தோடுகிறது.

நமது வீரப்புலிப்படை தளரவில்லை. வளர்ந்து நிழல் தரும் விருட்சமாகிவிட்டது. என்றாலும் அதனை இன்னும் பன்மடங்காகப் பெருக்க தமிழர்களிடையே உள்ள பார்வையாளர்கள் முன்வரவேண்டும். எனது குடும்பத்தில் போராளிகளுமில்லை மாவீரர்களுமில்லை என்று கூறும் இழிநிலை மாறவேண்டும். நமது காணிபூமிகளில், சோத்துச் சுதந்திரங்களில் உரிமைபாராட்டுவதில் நமக்கு எத்தனை அக்கறை உண்டோ அதே அக்கறை நமது தேசத்தை விடுவிப்பதிலும் உருவாகவேண்டும். இல்லையேல் நமது உடலில் பாய்வது இரத்தமாக இருக்க முடியாது. ஏனெனில் அடிமையின் உடலில் இரத்தம் இருப்பதற்குக் காரணமில்லை.

நாம் போராட வேண்டும் இல்லையேல் நமது எல்லாவற்றையுமே இழந்தவர்களாவோம். நமது தேசியத் தலைவர் அவர்கள் சொல்வார்

'இப்போது நாங்கள் விழிப்புடன் செயற்படத் தவறினால் இத்தனை ஆண்டு காலமாக நாம் செய்த தியாகங்கள் நாம் புரிந்த சாதனைகள் நாம் அடைந்த வெற்றிகள் நாம் அனுபவித்த துன்ப துயரங்கள் நாம் கொடுத்த உயர் விலைகள்

(தொடர்ச்சி 15-ம் பக்கம்)






# லெப்.கேணல் பாமா

## சியாமளா சண்முகசுந்தரம்

### இன்பருட்டி, பருத்தித்துறை

விடுதலைப் புலிகள் மகளிர் படையணி சந்தித்த அனேகமான சண்டைகளில், அது தரைச் சண்டையாயினும் சரி கடற்சண்டையாயினும் சரி அவற்றிலே தனது பங்களிப்பைச் செய்து தனக்கென ஒரு தனி இடத்தைப் பிடித்துக்கொண்டவள் எங்கள் பாமா!

எல்லாவற்றிலுமே குறிப்பிடத்தக்க திறமையுள்ள, நிறைவான போராளியாக நாம் அவளைக் கண்டோம். நெஞ்சுக்குள் உறைந்துபோன அவளது உருவமும் உறுதியான நடவடிக்கைகளும் எந்த ஒரு போராளியையும் அடிக்கடி நினைவுகூரச் செய்யும்.

எங்கட பாமாக்காவோ?

என்று அவளைப்பற்றிக் கூறி கண்கலங்கும் போராளிகள் அனேகம், நேற்று வரை இந்தத் தென்னந்தோட்டங்களிலும், கடலின் உப்பு நீரிலும் கால்களை நீளநீள வைத்தபடி உலா வந்தவள். இன்று எங்கள் நினைவுகளுக்குள் நீளமாய் உறைந்து போனாள்.

பருத்தித்துறையிலுள்ள இன்பருட்டி கடற்கரை ஓரத்தில் சின்னக் குழந்தையாய் விளையாடி சிப்பிகளும் கிழிஞ்சல்களும் பொறுக்கி.... அவள் குழப்படிக்காரியாகத் தான் இருந்தாள். சண்முகசுந்தரம் ஐயாவுக்கும் - இரத்தினேஸ்வரி அம்மாவுக்கும் நாலாவது பிள்ளையான அவள் சியாமளாவாக வலம்வந்து அந்தவீட்டை நிறையவைத்தவள். 1971.03.28 இல் அவள் பிறந்த போது அந்தவீடு நிறைந்துதான் போனது. சியாமளா சரியான துடியாட்டக்காரி அம்மாவுக்கு விளையாட்டுக்காட்டிவிட்டு, இன்பருட்டிக் கடற்கரை ஓரங்களில் கால்கள் மணலிற் புதைய, சின்னக் குழந்தையாய் தத்தித் தத்தி வருவாள், தொடுவானைப் பார்த்தபடி, எறிகின்ற அலைகளில் நனைந்தபடி நீண்ட நேரங்கள் நிற்பாள். அம்மா அவளைக்காணாது தேடிவரும் வேளைகளில் ஓடி ஒளித்து, அவளது குழந்தைக்காலக் குழப்படிகள் சொல்லிமாளாது.

அவள் தனது பள்ளிக்கூட வாழ்க்கையிலும் மிகவும் கெட்டிக்காரியாக இருந்தாள். தனது உயர்தரக் கல்வியை பருத்தித்துறை மெதடிஸ்ற் கல்லூரியில் கற்றபோது உயிரியல் விஞ்ஞானத்தைத் தேர்ந்தெடுத்திருந்தாள். படிப்பிலும் சரி, விளையாட்டிலும் சரி என்றுமே பின்தங்கியது இல்லை. விளையாட்டுப் போட்டிகளில் அவள் பெற்ற சான்றிதழ்கள் ஏராளம்.

இப்படி இருந்தவளது வாழ்வின் அமைதியை இந்திய இராணுவத்தின் நடவடிக்கைகள் குலைத்தன. அவளது அண்ணன் கடற்புலி லெப்டினன்ட் வெங்கடேஷ் வீரச்சாவைத் தழுவிக்கொண்டபோது படிப்பைவிட நாட்டுப்பணி மேலாகப்பட்டது அவளுக்கு. இலட்சியப்பணியைத் தொடர சியாமளா இயக்கத்தில் இணைந்தாள்.

1989 ஆம் ஆண்டு பங்குனி மாதம் அவள் இயக்கத்துக்கு வந்தநேரம், தமிழீழத்தில் வழக்கி விழுகிற இடமெல்லாம் இந்திய இராணுவம், புலிகளை இரவும் பகலும் சல்லடை போட்டுத் தேடிக்கொண்டிருந்த நேரம். புலிகளின் முக்கியமான நடவடிக்கைகள் யாவும் காட்டிலே மேற்கொள்ளப்பட்டன. அப்போதிருந்த சூழ்நிலையில் இயக்கத்தில் போராளிகளின் எண்ணிக்கை மிகக்குறைவு அதுவும் பெண்போராளிகள் எண்ணிக்கை ஒருசில நூறுகளுக்குள் மட்டுமே. இத்தகைய சூழ்நிலையில் சியாமளா, பாமாவாக தன்பெயரை வைத்துக்கொண்டு நான்காவது பயிற்சி முகாமில் பயிற்சியெடுத்தாள். பயிற்சிகளில் அவள் காட்டிய திறமையும் உயர்ந்த திடமான உடலமைப்பும் அவளை 50 கலிபர் துப்பாக்கியின் உதவிச் சூட்டாளராக செயற்படவைத்தது. தனது கனரக ஆயுதத்தை தோளிலே சுமந்தபடி விங்குகளை தோளின் குறுக்காகப் போட்டபடி அவள் நடப்பது தனியான கம்பீரம்! காட்டுக்குள் நீண்டதூரங்கள் நடந்து, காடு முறித்து, எமக்குத் தேவையான சாமான்களை நாம் சுமந்துவருவது வழக்கம். களைத்த சுமைகள் தோளை அழுத்த அந்த வேளையிலும் இவள் கலகலத்தபடி வருவாள். எங்களுக்குப் பாரங்குறைந்தது போற்தோன்றும்.

1990 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இந்திய இராணுவம் எம் நாட்டைவிட்டு வெளியேறிய போது காட்டில் இருந்து இருநூறு பேர்கொண்ட குழு யாழ்ப்பாணம் வந்தது. இக் குழுவில் பாமாவும் ஒருத்தியாக இருந்தாள். அன்றிலிருந்து விடுதலைப் புலிகள் மகளிர் படையணி சந்தித்த அனேகமான சண்டைகளில் அவளது தடங்கள் பதிந்த வண்ணமிருந்தன.

கோட்டை, பலாலி, காரைநகர், சிலாவத்துறை, பலவேகய ஒன்று, மணலாறு என்ற நீண்ட பட்டியலில் அங்குள்ள காவலரண்களில் அவளது கால்கள் அகலப்பதிந்தன.

பாமா! குறிப்பிட்ட சில காலப்பகுதியினுள்ளே இவளது வளர்ச்சி அபாரமானது. இவளின் உறுதியான செயற்பாடுகளும் நினைத்ததைச் சாதிக்கும் பண்பும் இவளைப் படிப்படியாக வளரச்செய்தன.

பலாலிக் காவலரண்களில் பாமா நின்றபோது அவளது செயற்பாடுகள் யாவையும் மறக்கமுடியாதவை, எந்தவேளையும் எனக்குத் தெரியாது என்று இவள் தலையாட்டியதை நாங்கள் காணவில்லை.

வீட்டிலிருந்து எல்லாம் தெரிஞ்சுகொண்டே வந்தனாங்கள். இயக்கத்தில் எவ்வளவு தூரம் வளர்ந்து விட்டோம். எல்லாம் முயற்சியாலைதான் என்று அடிக்கடி கூறுவாள்.

அவற்றை நாம் பலாலியில் கண்டோம்.

அது 1990 ஆம் ஆண்டின் மழைக் காலப்பகுதி. பலாலியின் செம்பாட்டுமண் மழை ஈரத்தில் பிசுபிசுத்தது. கால்கள் சேற்றில் புதைந்தன. சேற்றுக் குழம்புகளின் நடுவே இருந்த அந்தக் காவலரண் அடிக்கடி எதிரியின் தாக்குதல்களுக்கு ஆளாகிக் கொண்டிருந்தது ஓயாமல் எறிகணைகள் விழுந்ததால் நிலம் கிளறிப் போனது. அடிக்கடி அவ்விடத்துக்கு முன்னேற இராணுவம் முயற்சிப்பதும் நாம் அடித்துத் துரத்துவதும் வழக்கமான ஒரு நிகழ்வாகிப் போனது.

இத் தருணத்தில், முதல்நாள் நடந்த கடுமையான சண்டையில் பதினொன்று பேர் காயம் அடைந்தனர். எதிரியின் இலக்கான அந்த இடத்தில் தொடர்ந்தும் எமது குழுவை நிலைநிறுத்துவதற்கு நாம் ஒரு பொறுப்பான ஆளைத் தேடிக்கொண்டிருந்தபோது பாமாவின் செயற்பாடு நம்பிக்கை ஊட்டுவதாய் அமைந்தது.

நான் குறுப்பைக் கொண்டுபோறன்.

அவள் எழுந்து சொன்னாள். இதுவரையும் பெரிய களங்களைக் கண்டவள் அல்ல அவள். ஆனால் அவளிடம் ஒரு வித்தியாசமான திறமை இருக்கத்தான் செய்தது. அவளுக்குக் கொடுக்கப்பட்ட குழுவைத் திறமையாகச் செயற்படுத்திய விதம் எமக்கு நிறைவைத் தந்தது. அடிக்கடி இராணுவத்துக்கு தலையிடி கொடுப்பதும் பாமாவின் வேலையாக இருந்தது. அந்தக் காலங்களில் பலாலியின் பனைவெளிகளை ஊடறுத்தபடி எதிரியின் தேடொளி இரவைப் பகலாக்கும். மிகமிகக் கிட்டவாக தனது ஒளியைப் பாய்ச்சியபடி இருக்கும்போதெல்லாம் பாமா அதற்கு குறிவைப்பாள் அவளது பிறவுண் குறிதவறியதாக நாங்கள் கேள்விப்படவேயில்லை. பயிற்சிமுகாமிலும் சரி சண்டைகளிலும் சரி அவள் நன்றாக குறிபார்த்துச் சுடும் திறமை பெற்றவளாக இருந்தாள்.

அப்படி ஒரு இடத்தில் தேடொளி உடைய மறு இடத்தில் எதிரி அதைப் பொருத்த மீண்டும் உடைய வைத்து, உண்மையில் அவர்களைச் சலிப்படையவே செய்துவிட்டாள். அந்த நீண்ட பனைகளில் நிலைபெடுத்தபடி இராணுவக் காவலரண்களை நோக்கி அடிக்கடி அருள் 89 ஐ அடிப்பாள். அது ஒரு விளையாட்டுப்போலை... ஆனால் குறிதப்பாத ஒன்றாக அவளுக்கு இருக்கும்.

இப்படி எத்தனை சம்பவங்கள்! பாமாவின் துடிப்பான அந்த நடவடிக்கைகள் ஒவ்வொன்றையும் பலாலியின் புழுதிபடிந்த செம்பாட்டுமண் சொல்லும். களத்து காற்று சொல்லும்.



பலாலிக்குப் பிறகு பெரிய களமாக இவளுக்கு ஆனையிறவுக்களம் அமைந்த போது அதிலும் தன்திறமைகளை வெளிப்படுத்தத் தவறவில்லை. ஆகாய கடல் வெளி நடவடிக்கையில் மகளிர் படையணியின் பக்கம் முன்முரமான சண்டையில் இவள் நின்றாள். உக்கிரமான மோதல், மழைபோல ரவைகள் காதை உரசுவதாக வரும் மயிரிழையில் தப்பித்த எறிகணை வீச்சுக்கள்... பாமாவின் குழுவிலும் அனேகம்பேர் காயம் பட்டுத்தான் போனார்கள். எதிரி பின்வாங்கும் வரை பாமா மட்டும் தனித்துநின்று அடிபட்டதை நினைக்கின்றோம். கடைசி

தொடர்ச்சி 7ம் பக்கம்

# செல்வி ஜடா கமலிட்டாவுக்கு சந்திரிகா படை இழைத்த கொடூரத்தை அவரின் அன்னை மனமுருகக் கூறுகிறார்

யூலை மாதம் பன்னிரண்டாம் திகதி அதிகாலை ஒரு மணிக்கு எங்களுடைய வளவில் மரக்கறிக் கடை வைத்திருக்கும் கேசவன் ரா என்னைக் கூப்பிடும் சத்தம் கேட்டது.

அந்த நேரம் எனது 21 வயது மகள் ஜடா கமலிட்டாவும் எனது மூத்த மகளின் பெண் பிள்ளைகளான 10 வயது, 8 வயது குழந்தைகளும் நானும் ஒரு அறையில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தோம். மற்றைய அறையில் எனது 23 வயது மகனும் பேர் மில் றோசரி ஹிட்லரும் எனது அண்ணனின் மகன் பேதுரு அந்தோனியும் மற்றைய அறையில் படுத்து தூங்கிக் கொண்டிருந்தனர். எங்கள் நண்பர் லெட்சுமி காந்தன் வெளியே விறாந்தையில் படுத்து தூங்கிக் கொண்டிருந்தார்.

நான் ராஜாவின் குரலைக் கேட்டு கதவைத் திறந்த பொழுது ஆயுதம் தரித்தவர்கள் இருவர் தங்கள் கண்களை துணியால் மறைத்தபடி நின்றிருந்தனர். காற்சட்டையும் பெனியனும் அணிந்த அவர்கள் கைகளில் கையுறை அணிந்திருந்தனர். மார்பில் ஜக்கெட் அணிந்திருந்தனர். என்னால் ராஜாவை பார்க்க முடியவில்லை கும்மிருட்டாக இருந்தது.

என்னிடம் எனது மகன் நெப்போலியன் எங்கே என விசாரித்தனர். முன்பு தமிழீழ விடுதலைப்புலிகளில் இருந்த எனது மகனை சிறிலங்கா இராணுவம் இரண்டு வருடங்களுக்கு முன்பு கைது செய்து அடைத்து வைத்திருக்கின்றது. அவரை சில வேளைகளில் இராணுவத்தினர் அழைத்து வந்து சில நாட்களுக்கு வீட்டில் தங்க அனுமதித்து அந்த லீவு முடிந்ததும் திரும்ப அழைத்து செல்வார்கள். இப்பொழுதும் அப்படியொரு விடுமுறையில் தான் அவர் வந்திருந்தார். ஆனால் அன்றையத் தினம் அவர் எங்கள் வீட்டில் தங்காது வேறு எங்கேயோ சென்றிருந்தார். அதனால் நான் அவர் வீட்டில் இல்லை எனக் கூறிவிட்டு அவர்கள் யார் என நான் கேட்டேன். இயக்கக்காரர் எனக் கூறிக் கொண்டே என் இடது பக்க முகத்தில் கண்ணுக்கு அருகில் அறைந்தனர். என்னை வெளியே இழுத்து எறிந்து விட்டு நம்பமுடியாது என்று வீட்டுக்குள் சென்றனர்.

வீட்டுக்கு வெளியே இருந்த எனக்கு உள்ளே என் மகளின் போர்வையை அவர்களில் ஒருவன் இழுப்பது தெரிந்தது. அவன் அது யார் என என்னிடம் கேட்டான். நான் அது என் மகள் எனக் கூறினேன். அவர்களில் ஒருவன் என்னை முற்றத்துக்கு இழுத்த வந்தான். அங்கே ராஜா நிலத்தில் இருப்பதைக் கண்டேன். அவர்கள் ராஜா உடுத்தியிருந்த சாரத்தைக் கழற்றி என் கண்களைக் கட்டினர்.

அதன் பின் உள்ளேயிருந்த எல்லோரையும் வெளியே வரும்படி அவர்கள் அழைப்பதைக் கேட்டேன். எனது மகள் குழறி அழுவதையும் எனது மகளிடம் அவளை சத்தம் வைக்க வேண்டாம் எனக் கூறும்படி அவர்கள் வற்புறுத்துவதையும் கேட்டேன். அவன் அவளைச் சத்தம் வைக்காது வெளியே அவர்களுடன் வரும்படி கூறினான். அவள் வெளியே வந்து எனக்கு அருகில் அமர்ந்து என் தோளில் முகத்தைப் புதைத்து விம்முவதை உணர்ந்தேன்.



இந்த வாக்கு மூலம் பள்ளிமுனை வடக்கு லூர்த்து வீதி 56ம் இலக்கத்தில் வதிக்கும் செபஸ்ரியன் அந்தோனியாவால் (ஜடா காமலிட்டாவின் தாயார்) 30.07.99 அன்று மன்னார் குடி அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்டது.

இரண்டு நிமிடங்களின் பின் என் கண்களின் கட்டுக்களை அவிழ்த்து விட்டு எல்லோரையும் உள்ளே போகச் சொன்னார்கள். எல்லோரும் பெரிய அறைக்குள் போனோம். ராஜாவைத் தவிர மற்ற மூன்று ஆண்களையும் அழைத்து அறை ஒன்றுக்குள் அடைத்தனர். நான் பயத்தில் கத்த என்னை பலமுறை அறைந்தனர்.

பின்னர் என்னை முற்றத்துக்கு இழுத்து வந்தனர். அங்கே மேலும் மூன்று ஆயுத நபர்கள் நின்றனர். அவர்கள் வேலியில் கிடந்த சாரத்தை எடுத்து வாயில் திணித்து கைகளை வளைத்து பெல்டினால் கட்டி நிலத்தில் தள்ளினர். இருவர் என்னை தங்கள் காலினால் அழுத்திப் பிடித்துக் கொண்டு நின்றனர்.

முதலில் வந்த இருவரும் முதலில் வீட்டுக்குள் போனார்கள் சுமார் மூன்று நிமிடங்களின் பின் மற்ற மூவரும் உள்ளே சென்றனர்.

நான் பின்னர் ஒருவாறு எழுந்து உட்கார்ந்து எழுந்து நிற்க முயற்சித்தேன். இவ்வாறு செய்வதனால் அவர்களின் கவனத்தை பிள்ளைகளில் இருந்து என் பக்கம் திருப்பலாம் என முதலில் எண்ணினேன். பின்னர் நான் மிக வேகமாக வளவுக்கு வெளியே ஓடினேன். தெருவழியாக ஓடுகையில் என் கை கட்டு நெகிழ்ந்தது. கையை விடுவித்து வாயில் இருந்த துணியை எடுத்து விட்டு பக்கத்தில் இருந்த வீட்டுக்குள் போய் அவர்களிடம் லாம்பு ஒன்று தந்து உதவுமாறு கேட்டேன். அவர்களிடம் குப்பி விளக்குத் தான் இருந்தது. அப்பொழுது ஒரு வெடிச் சத்தம் முதலில் கேட்டது. அடுத்து ஐந்து ஆறு வெடிச் சத்தங்கள் கேட்டன.

நான் பள்ளிமுனை பொலிஸ் காவலரணுக்குச் சென்று நடந்தவற்றை கூறி வெடிச்சத்தங்கள் கேட்கின்றன உதவிக்கு வாருங்கள் என மன்றாடினேன். அவர்கள் தங்களால் அந்த நேரத்திற்கு வர முடியாது எனக் கூறி திரும்பி வீட்டுக்கு போகுமாறு கூறினர். ஆயினும் நான் பொலிஸ் காவலரணுக்கு முன்பாக இரண்டு மணித்தியாலங்கள் உட்கார்ந்திருந்தேன். அதன் பின்னர் 3.30 மணியளவில் எனது மற்றொரு உறவினரின் வீட்டுக்கு போய் நான் அவர்களுடன் விடியும் வரை இருக்கப் போவதாக கூறினேன்.

காலை ஆறு மணியளவில் நான் அவர்களை எனது வீட்டுக்குப் போய் அங்கு என்ன நடந்தது எனப் பார்க்கும்படி வேண்டினேன். சீமன் ஜோவர் என்பவர் எனது வீட்டுக்கு போய் பார்த்து விட்டு வந்து எனது மகளைச் சுட்டுக் கொன்றுள்ளார்கள் எனக் கூறினார். நான் வீட்டுக்குப் போன போது அங்கே பலர் கூடியிருந்தனர்.

காலை எட்டு மணியளவில் இரண்டு மூன்று இராணுவத்தினர் வந்து உடலை பார்வையிட்டுச் சென்றனர். கிராமசேவையாளர் வந்து விசாரணை செய்து பொலிசுக்கு அறிவித்தார். மாவட்ட நீதிபதியும் பொலிசாரும் வந்து காலை பத்து மணியளவில் விசாரணை நடாத்தி விட்டு உடலை பிரேதபரிசோதனைக்காக ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோகக் கட்டளையிட்டனர். நாங்கள் ஒரு வானில் உடலை எடுத்துச் சென்றோம்.

கேட்டுக்கொண்டதன் பேரில் மன்னார் பொலிசுக்கு போய் வாக்கு மூலம் கொடுத்தேன். எனது குழந்தைகள் உடலை நான்கு மணியளவில் வீட்டுக்கு கொண்டு வந்து மாலை இறுதிச்சடங்குகள் செய்து புதைத்தோம்.

நான் மறுநாள் ஆஸ்பத்திரிக்கு போய் இரண்டு நாள் அங்கிருந்தேன். பொலிசார் என்னை விசாரணைக்கு வேண்டுமென்றதினால் நான் ஆஸ்பத்திரியில் இருந்து துண்டு வெட்டிக் கொண்டு பொலிஸ் நிலையத்திற்கு போனேன்.

இந்த வழக்கு 20ம் திகதி மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு உடலை மீளவும் தோண்டியெடுத்து விசாரணைக்காக கொழும்புக்கு கொண்டு செல்லவும் பின் அங்கு புதைக்கவும் எனது விருப்பு கோரப்பட்டது. நான் அனுமதித்ததின் பேரில் 21ம் திகதி உடல் தோண்டியெடுக்கப்பட்டு கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டது.

கேசவன் ராஜாவால் இரண்டு சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் அடையாளம் காணப்பட்டனர். எனது மகன் ஹிட்லரால் ஒருவர் அடையாளம் காணப்பட்டார்.

6ம் பக்கத் தொடர்ச்சி

யாக காலிலே பலத்த காயமடைந்த ஒரு போராளியை அந்தக் கும்மிருட்டு நேரத்திலே கண்டுபிடித்து பின்னுக்கு கொண்டு வந்து இவள் மூச்சுவிட்டபோது தனியொருத்தியாக நின்று தடயங்கள் எல்லவாற்றையும் பொறுக்கியபோது........

ஆனையிறவுச் சண்டையில் இவள் தலையில் காயப்பட்டாள். இவள் தப்பி வருவாள் என்பதில் எங்களுக்கு ஒரு துளியளவு நம்பிக்கையே இருந்தது.

ஆனால் பாமாவின் திடமான உடல் அமைப்பும் உறுதியுமே அவளைத் தப்ப வைத்தது. மீண்டும் பழைய நிலைக்கு இயங்கவைத்தது.

நிறையக் களங்கண்ட ஒரு போராளியாக, ஒரு குறும்புக்காரியாக, எல்லோருக்குமே உதவுகின்ற இளகிய மனம்படைத்தவளாக நாம் அவளைக் கண்டோம்.

இப்படித்தான் ஒருநாள்.

அது லெப்.கேணல் ராஜனின் வழிநடத்தலில் நடைபெற்றுக் கொண்டிருந்த அதிகாரிகள் பயிற்சிக்கல்லூரி. அதில் இவள் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தபோது, இவளது முகாமுக்கு ஒரு சிறுமியும் சிறுவனும் சாப்பாடு கேட்டு வந்தனர். அப்போது அங்கு உணவேதும் இருக்கவில்லை. இதை அவதானித்த இவள், எல்லோரிடமும் இருக்கும் காசு எல்லாவற்றையும் சேர்க்க ரூபா வந்தது. அதை அவர்களிடம் கொடுக்கச் சென்றபோது, அச்சிறுமியிடம்:

உங்களது பெயர் என்ன?

என்று கேட்க, அப்பிள்ளை வாய்திறக்க முடியாத நிலையில் இருந்ததைக்கண்டு இவள்,

ஏன்? என்று விசாரித்தாள். விமானக் குண்டுவீச்சின்போது சன்னமொன்று தாடைக்குள் தாக்கியதால் வாய்திறக்க முடியாது என்ற விபரத்தை அந்தச் சிறுமி சைகை மூலம் கூற, இவளது கண்கள் குளமாகின.

அந்தக் காசைக் கொடுத்து அனுப்பி விட்டு இந்தச் சின்னப்பிள்ளை என்ன பாவம் செய்தது? இதுக்கு இவங்களிற்கு முறையான பாடம் படிப்பிக்கவேணும் என்று சொல்லிய போது இவளது குரல் தழுதழுத்தது. அடிக்கடி இந்தக் கஷ்டமெல்லாம் எங்களோட முடிஞ்சிட வேணும். எங்கட சின்னனுகள் அனுபவிக்கக்கூடாது. அதுகள் சந்தோசமா தங்கட தாய், தகப்பனோட வாழோணும் என்று கூறி அவள் கண்கள் கலங்கி தவித்ததை நினைக்கும் போது.........

அன்று படைத்துறைக் கல்லூரியில் வோக்கி பற்றிய வகுப்பு, புதிய ரகங்கள், புதிய தொழிற்பாடுகள் நுட்பமாக ஆராய்ந்து விளக்கப்பட்டது. இறுதியாக விரிவுரையாளர் 'இந்த (CI 25) வோக்கி புதிசு. இதின்ரை தொழிற்பாட்டைப்பற்றி நான் உங்களுக்குச் சொல்லித்தரமாட்டன். நீங்கள் இதை ஆராய்ந்து கண்டு பிடிக்கவேணும். குறிப்பிட்ட கால அவகாசம் தருவன்.' என்று கூறி முடித்தபோது பாமா அதோடு முழு மூச்சாய் அதனோடு ஒன்றி அதன் தொழிற்பாட்டை அறிவதில் நேரங்காலம் இல்லாது கண்ணாய் இருந்ததை இப்போது நினைத்தாலும்.....

அந்த முயற்சியில் அவள் வெற்றிபெற்றாள். அதன் தொழிற்பாட்டை முதலில் கண்டு பிடித்து விளங்கப்படுத்தினாள். அப்போது எல்லாப் போராளிகள் மத்தியிலும் இவளின் திறமை வெளிப்பட்டது. இவளின் விடாமுயற்சியை நாம் எங்களுக்குள் சொல்லிச் சொல்லி வியந்து போனோம்.

சதுரங்கம் விளையாடுவது அவளுக்குப் பிடித்தமான ஒரு விளையாட்டு. நுட்பமாகவும் திறமையாகவும் அவள் விளையாடுவது யாவரையும் வியக்கவைக்கும். பார்ப்பவரைப் பார்த்துக் கொண்டு நிற்க வேண்டும்போல நினைக்கத் தூண்டும். அவளின் இராசாவும் இராணியும் தோற்றதாக வரலாறு இல்லை. அந்தளவுக்கு எதிரே விளையாடுபவரை விழுத்துவதில் குறியாக இருப்பாள். அவளின் இன்னொரு விருப்பமான விளையாட்டு கரப்பந்தாட்டம். மாலை நேரத்தில் அவள் மைதானத்தில் விளையாட வந்துவிட்டாள் என்றால், மைதானம் கலகலத்துப்போகும். துள்ளி எட்டி ஓடிஓடி அடிப்பது அவளுக்கொரு கலையாகத் தான் இருந்தது.

இவளது குறும்புகளுக்குக் குறைச்சலில்லை. நேரங்காலம் பார்க்காமல் சுற்றி நிற்பவர்களை வயிறுகுலுங்கச் சிரிக்க வைத்துவிட்டு நழுவிவிடுவாள். ஒரு தடவை இவளும் இவளது தோழியும் ஒரு உந்துருளியில் இரவு ஒன்பது முப்பது மணியளவில் வடமராட்சியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்தனர். அவளது உந்துருளியின் வெளிச்சம் மிகவும் மங்கலானது. பாதை தெளிவதாகத் தெரியவில்லை. புறாப்பொறுக்கியடியில் வந்து கொண்டிருந்தபோது ஒரு சரக்கு உந்துருளி மிகுதியான ஒளியைப்பாய்ச்சியபடி எதிர்ப்பக்கமிருந்து வந்துகொண்டிருந்தது. பாமா உடனடியாகத் தனது வெளிச்சத்தை அணைத்துவிட்டு கையை மேல் நோக்கிக் காட்டினாள். உடனே சரக்கு உந்துருளியின் ஓட்டுனர் உலங்குவானூர்தி வருவதாக எண்ணி, தனது வெளிச்சத்தை நிறுத்திவிட்டு ஒரு ஓரமாக வாகனத்தை நிறுத்தவும் இவள் தனது உந்துருளியை வேகமாக ஓட்டிச் சென்று விட்டாள். இப்படி நான்கு ஐந்து வாகனங்களை நிறுத்தி அந்த இடைவெளியைப்பயன்படுத்தி தனது வாகனத்தை ஓட்டினாள். முனியப்பர் கோவிலடியில் செல்லும் போது ஒரு வாகனம் வர அதற்கும் அவள் மேல்நோக்கிக் கையைக் காட்டி நிறுத்திய பின்னர்தான் பார்த்தாள் அது எமது போராளிகளின் வாகனம் ஒரு நிமிடம் அதிர்ந்து போனாலும் உடனே உந்துருளியை அதிவேகமாக ஓட்டியபடி வந்து சேர்ந்து, சிரிசிரியென்று சிரித்து, பாமா இப்போதும் கண்ணுக்குள்ளேதான் நிற்கின்றாள்.

இவளுக்கு ஏதும் ஏறுமாறாகச் சொல்லி கோபப்படவைப்பது எங்களுக்கு பெரிய விளையாட்டுப் பார்பதாக இருக்கும். எதற்

(தொடர்ச்சி 10ம் பக்கம்)



# ஐந்தாண்டுகளில்

போரை நினைத்தபடி வெற்றி கொள்ள முடியாத நிலையும் பொருளாதார நெருக்கடிகளும் சிங்கள அடக்குமுறை இயந்திரத்தை விழி பிதுங்க வைத்திருந்தது. தமிழர்களுடனான போரை ஐக்கிய சிறீலங்காவுக்குள் அடக்கி முடிவுக்குக் கொண்டுவரக் கூடிய தலைமையை சிங்கள மக்கள் தேடத் தொடங்கினர். தமிழர்களின் தேசிய சுயநிர்ணய உரிமை அல்லது தமிழ் மக்களின் துன்ப துயரங்களைப் பற்றிய தாக்கமற்ற ஒரு தலைமையை தேர்வு செய்வதே சிங்கள அமைப்புக்குள் பொதுவான நோக்காக இருந்தது. இராணுவ அடக்குமுறை கோட்பாடுகள் அல்லது இலங்கைத் தீவின் எதிர்காலத்தில் இராணுவத்தின் பங்கு பற்றிய சந்தேகங்கள் அற்ற இரு பேரின வாதக் கட்சிகளில் ஒன்றை சிங்களம் தேர்ந்தெடுக்க வேண்டிய காலகட்டத்தில் சந்திரிகா இவ் பேரினவாத கோட்பாடுகளை நுட்பமாக முன்னெடுக்கும் உத்திகளையும் பின்பலத்தையும் கொண்டவராக தேர்வானர்.

அவர் முன் வைத்த சமாதானத்திற்கான குரல் சிங்கள பேரினவாத கருத்துக்களை பாதுகாப்பதற்கான கோட்பாடாகவே சிங்களத்தால் கருதப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டார். தமிழர்களின் தேசிய அரசியல் உரிமைகள் பற்றிய அல்லது அடக்குமுறையின் கொடுமை பற்றிய பிரக்ஞை கொண்டவராக சந்திரிகாவின் அரசு அமையவில்லை. அது பற்றிய விவாதங்களை தூண்டக் கூடிய தலைமையை அது கொண்டிருக்கவில்லை. மாறாக போரை முடிவுக்கு கொண்டு வரல் என்ற அகலமான பிரகடனத்தை முன்வைத்து சிங்களத்தின் சர்வதேச தேவைகளை பூர்த்தி செய்யக் கூடிய உத்திகளைக் கொண்டவராக சந்திரிகா தேர்வானர்.

போரிற்கான வெளிக்காரணங்களை திசைதிருப்பியபடி மூல காரணத்தை சென்றடைய புதிய சிங்களத் தலைமை முயன்றது.

17 வருடத்து ஐ.தே.க அரசின் அடக்குமுறைப் போரிற்கான உத்திகளை மட்டும் மாற்றி புதிய திசையில் போரை நடாத்துவதற்கான தேர்வே சந்திரிகா என்ற வரலாற்று உண்மையை ஈழப்போர் 3 என விபரிக்கப்படும் போரின் ஆரம்பமும் தொடர்ச்சியும் வெளிக்காட்டுகின்றது.

1999இன் முடிவில் 70 பில்லியன்கள் வரை இது அதிகரிக்கப்படலாம் என ஊகிக்கப்படுகின்றது.

போரின் உத்திகளை மாற்றி தமிழர்களின் பலமான மையங்களை கைப்பற்றுவதன் மூலம் புலிகளை பலவீனப்படுத்தி அழிக்கலாம் என்ற நோக்கத்தை நிறைவேற்ற பெரும் ஆயுதத்தளபாட அதிகரிப்புடன் ஆட்பல அதிகரிப்பையும் சந்திரிகா மேற்கொண்டார்.

1995இல் சூரியக் கதிர் நடவடிக்கையையும் 1996இல் எடிபல நடவடிக்கையையும் பின்னர் ஜெயசிக்குறுய் நடவடிக்கையையும் சந்திரிகா அரசு நிகழ்த்தியது. பெரும் சுடுகல ஆற்றலுடன் ஆரம்பிக்கப்பட்ட சந்திரிகாவின் போர் நடவடிக்கைகள் ஜெயசிக்குறுய் கட்டத்தை எட்டிய போது தமிழர்களின் அதிகரிக்கப்பட்ட இராணுவ பலத்தை எதிர்கொண்டது. பேரினவாதத்தின் போக்கை தெளிவாக உணர்ந்து கொண்டு அதற்கேற்ப வகுக்கப்பட்ட இராணுவ அரசியல் திட்டங்களுடன் புலிகள் போரை எதிர்கொண்ட போதுதான் சிங்களம் தன் பலவீனத்தை தெளிவாக அறிந்தது. வன்னியில் குவிக்கப்பட்ட சிங்களத்தின் உச்ச பலத்தை தமிழர்கள் தடுத்து நிறுத்தி சிதைக்க முற்பட்டமையே கடந்த ஐந்து வருட காலத்து இராணுவ பரிணாமத்தின் உண்மையான சாதனையாகும்.



தன் போரிற்கான உத்திகளில் இராணுவ இயந்திரத்தின் நலன்களை விட்டுக் கொடுக்காது அரசியல் தீர்வு பற்றிய பேச்சுக்களை முன்நிறுத்தினார். புலிகளுடனான பேச்சுக்களினை போரிற்கான தேவைகளினைப் பாதுகாத்தவாறு இத் தலைமை நடாத்தியது.

சிங்களத்தின் இவ் வித்தைகளினை பல்வேறு ரூபங்களில் நீண்ட காலமாக எதிர்கொண்டு பழகிய தமிழர்களின் தலைமை நேர்மையான தீர்வுக்கான தேவைகளை வலியுறுத்திய போது சமாதானத்திற்கான யுத்தம் என்ற சுலோகத்துடன் முழுமையானதொரு போரை சந்திரிகா ஆரம்பித்தார்.

இப் போரானது சிங்கள பேரின வாதத்தின் மார்க்கமற்ற போக்கை வெளிக்காட்டியது. வெறுமனே சந்திரிகா அரசு போரின் போக்கை மாற்றி உற்சாகமூட்டப்பட்ட இராணுவ இயந்திரத்தை போரில் ஈடுபடுத்தினார். பாரிய நிதி ஒதுக்கீடும் சிங்களத்தின் முழுமையான ஆதரவும் போரிற்கு வழங்கப்பட்டது. மறுபுறம் உலக நாடுகளிடமே பொய்ப்பரப்புரை மூலமும் இரகசிய பேரங்கள் மூலமும் திரட்டப்பட்ட ஆதரவு போர் இயந்திரத்தை பலப்படுத்தியது.





1983-ல் 1.3 பில்லியனாக இருந்த போர்ச் செலவீனம் 1986-ல் 3.3 பில்லியனாகவும் 1989-ல் 6 பில்லியனாகவும் 1993-ல் 16.6 பில்லியனாகவும் அதிகரித்தது. இதனை சந்திரிகா 1994-ல் 21.4 பில்லியனாக அதிகரித்தார். 1995-ல் 25 பில்லியனாகவும் 1996-ல் 31.7 பில்லியனாகவும் 1997-ல் 45 பில்லியனாகவும் 1998-ல் 57 பில்லியனாகவும் இது அதிகரிக்கப்பட்டது.

இவ் ஐந்து வருட காலத்தில் தரை கடல் சமர்களுடன் புலிகள் வான் படைகளையும் கட்டி எழுப்ப ஆரம்பித்தமை சந்திரிகா அரசின் இராணுவ சாதனைப் பட்டியலை நிர்வாணப்படுத்தும் நிகழ்வாகும்.

மறுபுறம் வெளிவிவகார வெற்றிகள் பற்றி சந்திரிகா அரசு உரிமை கோருகையில் உலக நிகழ்ச்சித் திட்டத்தில் தமிழர்களின் அரசியல் நிலைப்பாட்டை எமது தேசியத் தலைவர் தெளிவாக பதிய வைத்துள்ள உண்மையை புறம்தள்ள முற்படுகின்றார்.

சிங்கள அரசு எப்போதும் தமிழர்களின் அரசியல் கோரிக்கையில்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# சிதைவுறும் சந்திரிகா





சர்வதேச தலையீட்டை அங்கீகரித்ததில்லை. 17வருட கால ஐ.தே.க ஆட்சியில் இந்திய தலையீட்டை தவிர்க்க முடியாமல் ஏற்றுக் கொண்ட சிங்களம் எப்போதும் மூன்றாம் தரப்பு மத்தியத்துவம் பற்றி ஏற்றுக் கொண்டதில்லை. ஆனால் இன்று மூன்றாம் தரப்பு மத்தியத்துவம் பற்றிய எமது தேசியத் தலைவரின் அரசியல் நிலைப்பாடு பல்வேறு உலக நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. அமெரிக்கா உட்பட சந்திரிகா அரசை முண்டு கொடுத்த சக்திகள் பல இன்று மூன்றாம் தரப்பு உதவி பற்றிய கருத்துக்களை பகிரங்கமாக தெரிவிக்கின்றன. கதிர்காமரின் பலத்த பரப்புரைகள் மத்தியிலும் தீர்வுக்கான மார்க்கம் புலிகளுக்கும் அரசுக்கும் இடையேயான மூன்றாம் தரப்பு மத்தியத்துவத்துடனான பேச்சுக்களே என உலக சமூகம் ஏற்கின்றது.

இது சந்திரிகா அரசிற்கு ஏற்பட்ட அரசியல் இராஜதந்திரத் தோல்வியே ஆகும்.

கதிர்காமரின் பலத்த இரைச்சலுடன் கூடிய இராஜதந்திர நகர்வுகள் கின்றனர். உருவாகிவரும் தேசத்திற்கும் அங்கீகரிக்கப்பட்ட தேசத்திற்கும் இடையேயான இராஜதந்திர வடிவங்கள் ஒப்பிடமுடியாது என்ற உண்மையை முழுமையாக உலக அரங்கில் தோற்கடிக்கப்பட்ட போதுதான் சிங்களம் உணரும்.

ஐந்தாண்டுகளின் முடிவில் சந்திரிகாவின் அரசு படிப்படியாக முன்னைய ஐ.தே.க அரசினைப் போன்ற தேக்கநிலைக்கு தள்ளப்பட்டு வருகின்றது. பொருளாதார நெருக்கடிகள் சிங்களத்தினை சிதைத்து வருகின்றது. போர் சார்ந்த பொருளாதாரம் வெடிப்புக் கண்டு வருகின்றது. தமது புதிய உத்திகளையும் உற்சாகத்தையும் புலிகள் வன்னியை மையமாக வைத்து பரவலாக்கி வரும் இராணுவ நடவடிக்கைகள் தோற்கடித்து வருவதை இராணுவ இயந்திரம் உணர்கிறது. இப்போது தீர்வுப் பொதி புலிகளுடனான பேச்சுக்கள் சர்வதேச மத்தியத்துவம் என்ற உத்திகளை சந்திரிகா அரசு பயன்படுத்த ஆரம்பித்துள்ளது.

இப் புதிய உத்திகள் ஊடாக தமிழர்களின் சர்வதேச நிலைப்பாட்



அரசு என்ற பலத்தை பயன்படுத்தி, உலகினதும் பிராந்தியத்தினதும் அரசியல் வணிக இராணுவ நலன்களை கணித்து மேற்கொள்ளப்படுவதாகும். இதன் மறுபுறம் தமிழர்கள் தமது நலன்களை தெளிவாக கணித்து தமது காலடிகளை பதிக்

டிற்கு ஆதரவாக திரும்பிய சக்திகளை சிங்கள அரசு மீள திசைதிருப்ப விளைகின்றது. எனினும் பூதாகரமாக வளர்க்கப்பட்டுள்ள இராணுவ இயந்திரம் அது சார்ந்து வளர்க்கப்பட்டுள்ள சமூக சக்திகள், பொருளாதார நெருக்கடிகள் என்

பன மீள முடியாத சகதிக்குள் சிங்களத்தை தள்ளியுள்ளதால் போரை தமிழர்கள் வெல்வது மட்டுமே இலங்கைத்தீவின் அரசியல் பொருளாதார பண்பாட்டு இராணுவ நெருக்கடிகளுக்கு முடிவு தரும்.

## போர்த்திட்டம் ஆட்டம் காண்கிறது

### தேசியத் தலைவர் வே.பிரபாகரன்



தமிழின ஒடுக்குமுறையின் சிகரத்தில் [illegible] சந்திரிகா அரசு இந்தப் போரை நீடிப்பதற்குத் தொடர வேண்டும் என்பதில் முழு முனைப்பாக நிற்கிறது. எத்தனையோ பேரழிவுகள் மத்தியிலும், பொருளாதாரம் சீரழிந்த நிலையிலும், இராணுவ இயந்திரம் ஆட்டங்கண்ட நிலையிலும் போரைத் தொடரவே சந்திரிகா அரசு விரும்புகிறது. போரை அரசியலாகவும், அரசியலைப் போராகவும் மாற்றம் செய்திருக்கும் சந்திரிகாவின் ஆட்சிக் காலமானது ஒரு நீண்ட, முடிவில்லாத யுத்த காண்டமாகவே தொடர்கிறது.

எத்தனையோ கற்பனைகளோடும் அரசியற் கனவுகளோடும் ஆரம்பிக்கப்பட்ட சந்திரிகாவின் போர்த்திட்டம் இன்று எதையுமே சாதிக்க முடியாது சிதைவுற்றுக் கிடக்கிறது. சிங்கள நாட்டின் இராணுவ பலத்தையும் வளத்தையும் ஒன்று குவித்து புலிகள் இயக்கத்தை வேரோடு சாய்க்க வேண்டும் என சந்திரிகா விரும்பினார். இந்தக் கனவுதான் போரின் மூலோபாயமாக வரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டது. ஆனால் புலிகள் இயக்கம் சாய்ந்துவிடவில்லை. மாறாக வேர் பரப்பி வளர்ந்து விருட்சமாக நிமிர்ந்து நிற்கிறது. இந்தப் போர் எமக்கு புதிய அனுபவங்களைத் தந்து எமது விடுதலை இயக்கத்தின் போர் ஆற்றலை என்றுமில்லாத அளவில் வளர்த்து விட்டது. எந்தளவு பலம் கொண்ட எந்த சக்தியாலும் எம்மை வென்றுவிட முடியாதென்ற மனோதிடத்தையும் தன்னம்பிக்கையையும் தந்தது. வற்றிப் போய்க் கிடந்த எமது ஆயுதக் களஞ்சியங்களை பெருமளவில் நிரப்பி விட்டது. இந்தப் போர் எம்மைப் பல வழிகளில் பலப்படுத்தி வளப்படுத்தியிருக்கிறது.

சந்திரிகாவின் போர்த்திட்டம் இன்று ஆட்டம் கண்டு நிற்கிறது. [illegible] வெடித்த வன்னிச் சமர்களில் சிங்களத்துச் சேனைகள் பேரழிவுகளைச் சந்தித்தன. நெருப்பாக எரிந்த எமது வீரர்களின் நெஞ்சுறுதிக்கு முன்னால் எதிரியின் ஆட்பலமும் ஆயுதபலமும் நிலைத்து நிற்கவில்லை.

சந்திரிகா அரசின் [illegible]

பேரினவாத ஆக்கிரமித்த பகுதிகளில் [illegible]

[illegible]







19.07.1999 அன்று தென்மராட்சிப்பகுதியில் சிறீலங்கா இராணுவச் சுற்றி வளைப்பின்போது ஏற்பட்ட மோதலில் போராளிகள் இருவர் வீரச்சாவடைந்துள்ளனர்.

**லெப். செல்வன்**
**விவேகானந்தன் சவுந்யன்**
யாழ். மாவட்டம்

**2ம் லெப். முல்லைத்தீபன்**
**ராமசாமி பாலகிருஸ்ணன்**
மாத்தளை. த/மு வவுனியா

20.07.1999 மன்னார் பேசாலைப் பகுதியில் சிறீலங்கா இராணுவம் பதுங்கியிருந்து தாக்கியதில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**வீரவேங்கை ஜெயபால்**
**யோகராஜா ஜெகநாதன்**
அம்பாறை மாவட்டம்

25.07.1999 அன்று வன்னியில் எதிர்பாராத வெடி விபத்தில் போராளி ஒருவர் வீரமரணமடைந்துள்ளார்.

**வீரவேங்கை தேன்நிலா**
**முத்துப்பிள்ளை புஸ்பராணி**
மட்டக்களப்பு மாவட்டம்

26.07.1999 அன்று ஒட்டுசுட்டான் பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**கப்டன் நாகேஸ்**
**தம்பிராசா இதயராசா**
(யாழ்.மாவட்டம் த.மு மல்லாவி)

31.07.1999 திருமலை மாவட்ட கப்பையாற்று இராணுவ முகாமில் இருந்து சிறீலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் பதுங்கியிருந்து தாக்கியதில் நான்கு இராணுவத்தினரைப் பலிகொண்டு, விழுப்புண் அடைந்த போராளி ஒருவர் 02.08.1999 அன்று வீரச்சாவடைந்துள்ளார்.

**லெப். வெற்றி**
**ராசேந்திரம் காண்டீபன்**
திருமலை மாவட்டம்

02.08.1999 அன்று பரந்தன் பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் இரு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

**கப்டன் ஆரத்தி**
**சித்தாந்தா சிவநந்தினி**
வவுனியா மாவட்டம், த.மு முள்ளியவளை

**லெப். செவ்வாணி**
**ராசையா யாழினி**
யாழ். மாவட்டம், த.மு தருமபுரம் கிளிநொச்சி

09.08.1999 அன்று கட்டைக்காட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**2ம் லெப். வேந்தன்**
**காளிமுத்து [illegible]**
(வவுனியா, த.மு தருமபுரம் கிளிநொச்சி)

Tamileelam Archive

09.08.1999 பரந்தன் பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலின் போது விழுப்புண் அடைந்த போராளி 13.08.1999 அன்று வீரச்சாவடைந்தார்.

**வீரவேங்கை பூவரசன்**
**யோர்ஜ் நியூட்டன்**
(யாழ்.மாவட்டம், த.மு வட்டக்கச்சி, கிளிநொச்சி)

16.08.1999 அன்று அதிகாலை புல்மோட்டைக் கடற்பரப்பில் கடற்படை மீதான தாக்குதலில் டோராப் படகை மூழ்கடித்து இரு கரும்புலிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

**கரும்புலி லெப்.கேணல் நித்தியாப்பன்**
**வீராப்பு சிவனேஸ்வரன்**
திருமலை மாவட்டம்

**கரும்புலி மேஜர். அந்தமான்**
**வடிவேலு செந்தில்குமார்**
மட்டக்களப்பு மாவட்டம்

20.08.99 அன்று அம்பாறைப் பகுதியில் சிறீலங்கா விசேட அதிரடிப்படையினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் இரு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

**மேஜர் சிவப்பிரகாசம் அல்லது ராஜா**
**தியாகரத்தினம் கனகரத்தினம்**
மட்டக்களப்பு மாவட்டம்

**லெப்.யாதகராஜ்**
**முருகுப்பிள்ளை வைரமுத்து**
மட்டக்களப்பு மாவட்டம்

19.08.99 அன்று சுட்டதீவுப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் இரு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

**வீரவேங்கை கடலரசன்**
**ஆரோக்கியம் புலேந்திரராஜா**
யாழ். மாவட்டம்

**வீரவேங்கை சிவா**
**தர்மலிங்கம் ராஜ்**
முள்ளியவளை

---

6ம் பக்கத் தொடர்ச்சி

## சுதந்திரத்தைத் தேடி...

காவது இவளுக்குக் கோபம் வந்தால் கடகடவென்று பேசிவிட்டு அடுத்த நிமிடம் மறந்துபோய் நின்று சிரிப்பாள். பேசுவது முழுக்க அடுக்கு மொழியில்தான். கதைக்கும் போது வேகமாகக் கதைப்பதால் அவளது கதை மற்றவர்களுக்கு விளங்குவது கடினம். அதனால் அவளை 'நடுங்கல்' என்று கேலி செய்வோம். இப்படிக் கேலி செய்தால் ஓடித் துரத்தி அடித்துவிடுவாள்.

1992.03.01 இல் விடுதலைப் புலிகளின் மகளிர் படையணி தன் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு அத்திவாரமிட்டது. அன்று கடற்புலிகள் மகளிர் படையணி தோற்றம் பெற்ற நாள். எங்கள் தலைவரின் கனவுகளுக்கு அபாரநம்பிக்கை ஊட்டும்படியாக கடற்புலிகளின் வளர்ச்சியில் பாமா வகித்த பங்கு அளப்பரியது.

1992ம் ஆண்டின் பிற்பகுதியில் பாமா தன்னைக் கடற்புலிகளின் அணியில் இணைத்துக் கொண்டாள். அன்றிலிருந்து கடற்புலிகள் மகளிர் படையணியை வளர்ப்பதில் அவள் தீவிர அக்கறை செலுத்தினாள். சகபோராளிகளுக்கு அணிநடை பழக்குவதிலிருந்து முக்கியமான வகுப்புக்களை எடுப்பது வரை முக்கியமாகப் பங்கேற்றாள், தலைமையேற்று நடத்தினாள்.

கிளாலியில் மக்கள் பாதுகாப்புக்காக எம்மால் நடத்தப்படும் பாதுகாப்புப் பணியில் இவளுடன் ஒரு குழு பங்களித்துக் கொண்டிருந்தது. கிளாலிக்கடலில் கொட்டும் பனியிலும், மழையிலும் ஊசியாகக் குத்தும் உப்புக் காற்றின் மத்தியிலும் அவள் விடியவிடிய காத்திருந்த காலங்களை நினைக்கின்றோம். தூரத்தே புள்ளியாய் விசைப்படகுகள் தெரியும். கடற்பரப்பில் மக்களின் படகுகள் ஆடிச் செல்லும். நெஞ்சு நீரற்று வரண்டு போய் கண்கள் பீதியால் வழிய அலைப்படும் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டிய கடற் சண்டைகளில் பாமா பங்கேற்றதை நினைக்கின்றோம். 'நீ வீட்டில் பிறந்த பிடிவாதக்காரியாய் இருந்தாயாமே? நினைத்ததைச் செய்து முடித்து நினைத்ததை வாங்கித்தரும்படி அடம்பிடித்த அந்தப் பிடிவாதம் தான் கடலிலும் உன்னைச் சாதிக்கவைத்ததோ?

'வோட்டர்ஜெட்டை ஏன் நீங்கள் எடுக்கவில்லை?' என்று பாமாவின் மாமா கேட்டபொழுது 'மாமா அதைக் கொண்டு வந்து விட்டுத்தான் உங்களுடன் கதைப்பேன்' என்று கூறினாளாம். இதைக்கண்கலங்கியவாறு மாமா கூறினார். நினைத்ததைச் சாதித்து முடிக்கும் அந்தக் குணம் பாமாவுடன் கூடப்பிறந்தது என்பதை நாம் பல சந்தர்ப்பங்களில் கண்டோம்.

இத்தகைய நினைத்ததைச் சாதிக்கும் பண்புதான் சாவின் இறுதிக்கணங்களிலும் அவளை இறுகப்பற்றியிருந்தது.

பூநகரி கூட்டுப்படைத்தளம் மீதான தாக்குதல் திட்டமிடப்பட்டது. இத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் மகளிர் படையணி முக்கிய இடம்பெற்றிருந்தது. இந்தச் சமரில் கடற்புலிகளின் பங்கு அளப்பரியது.

அந்தவகையில் நாகதேவன்துறையில் கடற்படைத்தளம் மீதான தாக்குதலுக்கு ஒரு படகுப்பொறுப்பாளராக பாமா அனுப்பப்பட்டாள். சண்டைக்குத் தனது படகைத் தயார் படுத்திக்கொண்டிருந்த பாமா, கரையில் நின்ற போராளிகளிடம் ஆளை ஆள் தெரியாத இருளில், நம்பிக்கை தொனிக்க, 'இந்தச் சண்டையிலே நாங்கள் வோட்டர் ஜெட் ஒன்றைக் கொண்டு வருவம்.' என்று சொல்லிவிட்டுப்போனாள். சொன்னபடி நாகதேவன் படைத்தளத்தை தகர்த்துவிட்டு ஒரு நீருந்து விசைப்படகோடு முகமெல்லாம் சிரிப்பாக வெற்றிப் பூரிப்போடு கரைக்குவந்தாள்.

அதிகாலை திரும்பவும் அவளை வருமாறு வேக்கி கூப்பிட்டது. எல்லா ஆயுதங்களும் அவளது படகு ஒரு குருவியைப்போல பறந்தோடும் புள்ளியாய்ப் போனது. ஏதோ ஒன்று அவளிடம் வித்தியாசமாகத் தென்பட்டது. வழமைக்கு மாறாக எதையோ கூற நினைப்பது போல..... அவளது கையசைப்பு அந்த இருளில் மங்கலாகத் தெரிந்தது. காற்றைக் கிழித்தபடி ஓயாத ரவைகள். காதை உரசுவதான அலற்றின் சத்தங்கள். அவைகளின் மத்தியில் அவளது படகு தூரத்தே மறைவதைப் பார்த்துக் கொண்டிருந்தோம். கடலலைகள் ஆர்த்தெழுந்து படகை மறைத்தன. நிலவை விழுங்கிய வானத்தில் ஒளிகொட்டும் நட்சத்திரங்கள் வனம் அமைதியாகத்தான் இருந்தது. கனதியான குண்டுச்சத்தங்கள் கன்னமிளைக்கும் இடைவெளியில் அறுக்கும் இடைவிடாத கனைத்தலிகளில் ஓசைகள் கேட்டுக் கொண்டேயிருந்தன.

'பாமா.....பாமா...' வோக்கி கூப்பிட்டது அவசரமாகத் தொடர்பெடுக்க முயன்று தோற்றுப்போய்.

ஒரு ரவை அவளது காலை ஆழமாகப் பிய்த்துச் சென்றது. பீறிட்ட இரத்தக்குளியலில் பாமா விழுந்துபோனது......

மீண்டும் மீண்டும் மங்கலான குரலில் அவள் கட்டளை பிறப்பித்துக்கொண்டு தான் இருந்தாள். மெல்லமெல்ல குரல் மங்கி, தடைப்பட்டங்கி.......

காலிலை தான் காயம்...... பிரச்சினையில்லை? என்ற எங்கள் எல்லோரினதும் நம்பிக்கைகளை பொய்யாக்கிக் கொண்டு மெல்ல மௌனித்துப்போனாள் அந்தப் பிடிவாதக்காரி. உப்புக்கரிக்கும் கடல்நீரோடு கலந்து போனாள். கிளாலிக்கடல் உதிரத்தில் தோய்ந்தபடி மீண்டும் மீண்டும் பொங்கியெழுந்தது.

ஆயிரமாயிரம் மாவீரர்களோடு எங்கள் பாமா விடுதலையின் பெருநெருப்பாய்ச் சுவாசித்தபடி... வெற்றியின் வேராய் உறங்கட்டும் அமைதியாய்...




# மாங்குளம் பாதைக்கு I.C.R.C. இனப்பிரச்சினைக்கு...

# மத்தியத்துவம் அவசியம்!

சிறீலங்காவின் பிரதிப்பாதுகாப்பமைச்சர் ரத்வத்தை, இம்மாதம் மூன்றாம் திகதி, உயர் படை அதிகாரிகள் சகிதம், மட்டக்களப்பு சென்றார். இறுதி நேரம் மட்டும் அவரது விஜயம் இரகசியகமாகவே வைக்கப்பட்டிருந்தது. அங்கு அவர், உயர்மட்ட இராணுவ ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினார். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளை நோக்கி இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு, நிலங்களை ஆக்கிரமிப்பது. பெரும் தாக்குதல் திட்டங்களை வகுத்து செயற்படுத்த முடியாத வகையில், விடுதலைப் புலிகளை ஒரு நிலையில் இருக்கவிடாது சதா நெருக்கடிகளைக் கொடுப்பது போன்ற திட்டங்கள் அங்கு ஆராயப்பட்டன. பெரிதும் சிறிதுமான இராணுவ நடவடிக்கைகளை முடுக்கிவிட, அக்கூட்டத்தில் ரத்வத்தை உத்தரவிட்டிருந்தார்.

அங்கு இரகசிய இராணுவ உயர்மட்ட ஆலோசனையை முடித்துக்கொண்டு, தனது உயர்மட்ட சகாக்களுடன் வவுனியா வந்தார். வவுனியா இராணுவத் தலைமையகத்தில் இரகசியமான இராணுவ உயர்மட்டக் கூட்டத்தை ரத்வத்தை நடத்தினார். அடுத்த கட்ட நடவடிக்கை என்ன, அடுத்த நகர்வுகளை எங்கு ஆரம்பிப்பது போன்ற திட்டங்கள் ஆராயப்பட்டன.

கட்டளையதிகாரிகளுக்கு தனது திட்டங்களை விளக்கிவிட்டு, உலங்குவானூர்தி ஏறி கொழும்பு சென்றுவிட்டார் ரத்வத்தை.

ஆலோசனைகள், திட்டங்கள், கட்டளைகள் யாவும் சிங்களப் படைத்தலைமையால் அடிக்கடி மேற்கொள்ளப்படுவதுதான் என்றாலும், ஏதோ புதிதாக இராணுவரீதியான முன்னேற்றத்திற்கு வழிவகை செய்துவிட்டு கொழும்பு திரும்பியிருக்கிறார் ரத்வத்தை என்ற பாணியிலான செய்திகள், கொழும்பில் வெளிவந்தன. ஆனால் யதார்த்தம் வேறு.

இந்தப் பிரச்சாரச் சூடு தணிவதற்கிடையில், மறுநாள் நாலாம் திகதி, வவுனியா மன்னார் வீதியில், சிறீலங்காப்படையின் பாதுகாப்பு ஏற்பாடுகள் நிறையக்கொண்ட பகுதியில், விடுதலைப் புலிகள் கிளைமோர்த் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர் இதில் பதினான்கு அதிரடிப்படையினர் கொல்லப்பட, இருபதுக்கும் மேற்பட்டோர் படுகாயப்படுத்தப்பட்டனர்.

இந்த அதிர்ச்சி அடங்குவதற்கிடையில், ரத்வத்தை இரகசிய இராணுவ ஆலோசனைக்கூட்டம் நடத்திய மட்டக்களப்பிலும் பெருந்தாக்குதலை விடுதலைப் புலிகள் நடத்தினர்.

ஒன்பதாம் திகதி மட்டக்களப்பு வாகரை முகாமின் எல்லையை கடந்து உள்நுழைந்து, உயர் கட்டளையதிகாரி கருணாரத்தினாவை கரும்புலிவீரர் ஒருவர் அழித்தார்.

சிங்களத்தின் முக்கியமான அதிகாரி, முன்னைய இனப்படுகொலை வரலாறுகளில் தனக்கும் என ஒரு இடத்தை வகுத்துக்கொண்ட இவ்வதிகாரி, பட்டப்பகலில், கரும்புலி வீரரின் இலக்காகி அழிந்துபோயினார். அத்துடன் சிங்களத்தின் அதிர்ச்சி முடிந்ததாயில்லை.

அடுத்து மட்டக்களப்பு நகரில் தாக்குதல். முழுக்கமுழுக்க சிங்களப் படையின் கட்டுப்பாட்டிலும் தீவிர பாதுகாப்பிலும் உள்ள பகுதியில், நீண்ட காலத்தின் பின் நடத்தப்பட்ட பெரும் தாக்குதலாக அது அமைந்துவிட்டது. இராணுவ வாகனத் தொடரணி மீது சொல்லிவைத்தாற்போல் நடத்தப்பட்ட இத் தாக்குதலில், பத்துப் பொலிஸார் கொல்லப்பட மேலும் இருபதுபேர் படுகாயமடைந்தனர்.

பதினாறாம் திகதி, திருமலை புல்மோட்டைக் கடற்பரப்பில் கடுமையான கடற்சமர். கடற்கரும்புலி வீரர்கள் இருவரால், டோரா தாக்கியழிக்கப்பட பத்துக்கும் மேற்பட்ட கடற்படையினர் கொல்லப்பட்டனர்.

பதினெட்டாம் திகதி, சிங்கள இராணுவத்தின் ஜெயசிக்குறுய் பிரதான தளப்படைதையின் ஓமந்தைப் பகுதியில் தாக்குதல், கிளைமோர்த் தாக்குதலுடன் நேரடிச் சண்டை. சிங்களப்படையின் ஆக்கிரமிப்பு எல்லைக்குள் நின்று, அணியாக நின்று விடுதலைப் புலிகள் மோதினர். பதினொரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.



அன்றே அம்பாறை சென்றல்கேம் அதிரடிப்படையினர் மீது நடத்திய தாக்குதலில் ஆறு அதிரடிப்படையினர் கொல்லப்பட்டனர்.

பதினேழாம், பதினெட்டாம் திகதிகளில் வடமராட்சியில் மோதல்கள். இருபத்திரெண்டாம் திகதி ஆனையிறவு பரந்தன் முகாம்களில் இருந்து முன்னேறிய சிறீலங்காப் படையினர் இழப்புக்களுடன் விரட்டியடிக்கப்பட்டனர்.


சந்திரிகா தலைமையிலான பொதுசன ஐக்கியமுன்னணி ஆட்சிக்கு வந்து ஐந்தாண்டுக் கொண்டாட்டங்களை கொண்டாடிக்கொண்டிருக்கையில், இந்த மாதத்தின் முதல் மூன்று வாரத்தில் மட்டும் சிறீலங்கா இராணுவம் விடுதலைப் புலிகளின் கைகளில் சிக்கி பட்டுநொந்த விபரங்களே மேலே தரப்பட்டுள்ளன.

ஆனால், தனது ஐந்தாண்டுக் கொண்டாட்டங்களில் சிறீலங்கா அரசு, யாழ்ப்பாணத்தைப் கைப்பற்றி கொடியேற்றியதை மீண்டும் ஒருமுறை தனது பெருமைக்குரிய சாதனையாக பிரதிக்கொண்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் சிங்கக்கொடியேற்றியதும் ஆரம்பித்த இனஅழிப்புக்கள் கைதுகள் காணாமல்போதல்கள் என்பன குறித்த தனது சாதனையை அது பகிரங்கப்படுத்தவில்லை என்றபோதும், பௌத்த சிங்களப் பேரினவாதத்திற்கு தற்போதைக்கு தலைமையேற்றுள்ள சந்திரிகாவின் ஐந்தாண்டு சாதனைகளாகவே, சிங்களப் பேரினவாதிகளால் அவை கொள்ளப்படும் என்பதில் சந்தேகமில்லை.

* * *

சந்திரிகா அரசும் அதன் இராணுவத் தலைமையும் வன்னிக்கான தரைப் பாதையை மூடி வைத்து, பாதை திறப்பிற்கு நிபந்தனை விதித்து விடுதலைப் புலிகளை பணிய வைக்க நினைத்ததும், அதன் மூலம் தனது இராணுவ அரசியல் லாபங்களை சம்பாதிக்க நினைத்ததும் தெரிந்ததொன்றே.




தன்னால் மூடப்பட்ட இப்பாதையை திறக்க சிறீலங்கா அரசு, நேர்மையற்ற நிபந்தனைகளை விதித்து தமிழ்மக்களை மோசமாகத் தண்டித்தது. இந்தச் சிறு விடயத்தில் கூட நேர்மையாக நடந்து கொள்ள நினைக்காத சிறீலங்கா அரசால், இனப்பிரச்சினை தீர்வுவிடயத்தில் எப்படி நேர்மையாக நடந்துகொள்ளமுடியும்?

இந்தப்பாதை விடயத்தில் எழுந்த மக்கள் எதிர்ப்பு போராட்டம், அனைத்துலக கண்டனங்கள் அதிருப்திகளுக்கு மத்தியில், மற்றுமொரு அநாகரீகமான மனித விரோத நகர்வை மேற்கொண்டபோதும் சந்திரிகா அரசு அதிலும் தோற்றுப்போனது. மக்களை கலவரமாக்கி, நடந்த இந்த முயற்சியும் வெற்றிபெறவில்லை.

இதற்குப் பின்னாலேயே, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தலையீட்டுடன், அதன்முன்னிலையில் ஒரு இணக்கம் காணப்பட்டது. போக்குவரத்துப் பாதை திறந்துவிடப்பட்டது.

இதனை வெறும் பாதைதிறப்பு என்ற ஒரு சம்பவமாக நோக்காமல், ஒட்டு மொத்தமான இனப்பிரச்சினையின் ஒரு அங்கமாகப் பார்ப்போமானால், உண்மையான இணக்கப்பாடு ஒன்றைக் காண்பதற்கு மூன்றாம் தரப்பொன்றின் தேவையின் அவசியம் புலப்படும்.

மாங்குளத்தினூடான வன்னிக்குப் பாதையைத் திறந்து மக்களின் உணவு மருந்து அத்தியாவசியப் பொருட்களுக்கு வழியேற்படுத்த தயங்கிய அல்லது மறுத்த சிறீலங்கா அரசு, இனப்பிரச்சினையை எவ்விதம் தீர்த்துவைக்கும். ஒரு பாதை திறப்பிற்கே, சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தின் பங்களிப்பு அவசியம் தேவைப்படுகின்றபோது, இனப்பிரச்சினையின் தீர்வுக்கு மூன்றாந்தரப்பொன்றின் அவசியம் நிச்சயம் தேவை என்பதை, சந்திரிகா அரசு தொடர்ந்து நிராகரிக்கமுடியாது.

விடுதலைப் புலிகளை பயங்கரவாத இயக்கமாக சித்தரித்த சிறீலங்கா அரசு, பாதை திறப்பிற்கு விடுதலைப் புலிகளுடன் பேசி இணக்கப்பாடு கண்டாக வேண்டியிருந்ததின் யதார்த்தமும், இன்னொரு உண்மையை வெளிப்படுத்துகின்றது.

அதாவது, பாதைதிறப்பிற்குக்கூட விடுதலைப் புலிகளுடன் பேசியே ஆகவேண்டும் என்ற நிலையிருக்கையில், இனப்பிரச்சினைக்கான தீர்வு என்றுவரும்போது, தமிழ்மக்களின் ஏகபிரதிநிதித்துவச் சக்தியான விடுதலைப் புலிகளை நிராகரித்துவிட்டு, தீர்வு என்பதெல்லாம் ஒருபோதும் நடவாத காரியம் என்பது வெளிப்படுகின்றது.

இந்த மாங்குளம் போக்குவரத்து குறித்த பேச்சுவார்த்தைகளும், இணக்கப்பாடும் இன்னுமொரு முக்கியவிடயத்தை வெளிப்படுத்துகின்றது.

அதாவது, விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்குத் தயார், நியாயபூர்வமான இணக்கப்பாட்டுக்கு வரவும்தயார் என்பது.

அத்துடன் இன்னுமொரு தலையாய விடயமும் இதில் தொக்கிநிற்கின்றது. அதாவது பிரச்சினைக்கு தீர்வுகாண்பதில், சிறீலங்கா அரசு நாட்டம் காட்டவில்லை என்பதுடன், தடைகளை, தடங்கலை ஏற்படுத்தி பிரச்சினையை பிரச்சினையாக வைத்திருக்கவே விரும்புகிறது என்பதும், மக்கள் மத்தியில் போராட்ட செயற்பாடுகளும், சர்வதேச அளவில் அழுத்தங்கள், கண்டனங்களும் எழுந்தால் மட்டுமே, சிறீலங்கா அரசு, தனது நீண்ட இனவிரோத நிலைப்பாட்டில் இருந்து இறங்கி, சமாதான நல்லிணக்கத்திற்கு வரும் என்பதுமாகும்.

**சுப்பு**

வீட்டில் குமார் எனும் இயற் பெயருடன் இருந்தவன் விடுதலைப் போராட்டத்தில் இணைந்த பின் பாசறையில் அரசனாக மாறினான். அங்கே அரசனும் வெற்றியும் நல்ல நண்பர்களாயினர். போர் வாழ்க்கையின் பெரும் பகுதியைக் காடுகளிலே கழித்தனர். ஒரு நாள் இவர்களின் அணியை குறிப்பிட்ட முகாமிற்கு வருமாறு பணிக்கப்பட்டது.

நீண்ட நாட்களின் பின் களமுனையில் இருந்து மக்கள் வாழும் பகுதிகளுக்குள் போவதையிட்டும் மக்களைக் காணப்போகும் சந்தோசத்திலும், விரைவாகப் போய் எமக்கான வாகனத்தில் ஏறினோம். வாகனம் சுமாரான வேகத்தில் அந்த நகரத்தின் சந்தி தாண்டி ஆஸ்பத்திரி வீதியில் சென்று கொண்டிருக்கின்றது. வீதியின் இரு மருங்கிலும் புதிது புதிதாக முளைத்த கடைகள் அந்தக் கடைகளில் காட்சிக்காக தூக்கிவிடப்பட்ட பொருட்கள் கண்களைக் கவர்ந்தன. அதனை இரசிக்க எல்லாபோராளிகளின் கண்களும் முண்டியடித்தன. அதைவிடப் வாகனத்தில் போக எதிர்த்து வீசிய தென்றல் மனதிற்குச் சுகமழித்தாலும்; காட்டில் வீசும் தென்றலைப் போல குளிர்மையும் காட்டில் கீச்சிடும் பறவையினங்களின் இனிமையும், சுகமும் இதில் இல்லை தான்.

இருந்தாலும் என்னோடு வந்த போராளிகள் அனைவரின் உள்ளங்களிலும்! சந்தோச அலைகள் புகுந்து துள்ளி விளையாடின. இது வரைநாளும் காவலரண்களில் இருந்தபடி எதிரிகளின் வரவை எதிர்பார்த்து ரைபிளின் கடுவிசையும் கையுமாக இருந்தவர்கள். இன்றைக்கு அந்த நிலை இல்லாமல் சுதந்திரமாய் வீதியோரங்களில் கைகளை அசைத்தபடி போகும் எங்கட மக்களைப் பார்த்தபடி மகிழ்ச்சி மழைகள் மனதிற்குள் பெய்ய போய்க் கொண்டிருக்கின்றம்.

ஆஸ்பத்திரிக்கு முன்னால் வலது பக்க கரையால் ஒரு அம்மா நடந்து வாறா எனது இரு கண்களின் பார்வையும் அந்த அம்மா மீது குந்திநின்றது. அவவைப் பார்க்கச் சரியாக என்ரை அம்மா மாதிரியிருந்தது.

மெய் சிலிர்த்தது. கால்கள் நிலை கொள்ளமறுத்தது. கண்பார்வையற்றவனுக்கு திடீரென பார்வை கிடைத்த மகிழ்ச்சியாய் நான் சந்தோசப்பட்டேன். ஆனால் அடுத்த நொடியில் எல்லாம் இடிந்து போயின. அவா என்ர அம்மா இல்லை என்டதை நான் உறுதிப்படுத்திட்டேன். கோப்பாயில இருக்கேக்க ஆமியன் அடிச்ச செல் எங்கட வளவுக்குள்ள வந்து விழுந்தது வெடித்த அதன் சிதறல் அம்மாவின் மூக்கில பட்டது. அந்த காய அடையாளம் இப்ப நான் கண்ட அம்மாவுக்கில்லை.

ஆனாலும் எனது சிந்தனை முழுவதும் அந்த அம்மா மீதே லயித்திருந்தது. பொத்தல் பொத்தலாகக் கிழிந்த பழைய சேலை சுருங்கி மேலே உயர்ந்திருந்தது. அந்தச் சேலை நீரைக்கண்டு பல மாதங்கள் இருக்கும். நெருப்பில் போட்டாலும் எரியாது. மேல் சட்டையும் அப்படித்தான். அரைநீரை வழுந்த தலைமுடி அழுக்கால் திரண்டு போய்க்கிடந்தது. ஒரு கையைச் சட்டிக்காட்டி தலையை அங்கும் இங்கும் திருப்பி சில வேளைகளில் மௌனமாகவும், சில வேளைகளில் சத்தமாகவும் ஏதோ தனக்குள் சொல்லியபடி போறா. அந்த அம்மா என்ன சொல்லுறா? ஏன் இந்த நிலைக்கு வந்தா? என் மண்டைக்குள் கேள்விச் சிதறல்கள் வெடித்தன. விடையறிய மனம் துடித்தது.

இந்த நிலைக்கு ஏன் வந்தா? சில வேளை என்ரை அம்மா என்னை விட்டுப் பிரிஞ்சது மாதிரி இவவும் தன்ரை மகனை பிரிஞ்சிருக்கலாம். ஆகாய வல்லூர்திகள் தலை சிதற கொத்தியிருக்கலாம். பச்சை வல்லூறுகள் பிடிச்சுக் கொண்டு போய் எங்காவது வதை முகாமில் வைத்திருக்கலாம். அல்லது யாழ்ப்பாணம் வரவேற்குது அதற்குப் பக்கத்தில இவவின்ர மகனோ மகளோ நிரந்தரமாய் புதையுண்டு போயிருக்கலாம். என்ன நடந்தது. எனது மனம் பல கோணங்களில் சிந்தித்து விடை இது வாகத்தான் இருக்கும் என ஊகித்து அறிய முற்பட்டது. ஆனாலும் ஊகங்கள் பல வடிவங்களில் எழுந்தன. விடைகள் கேள்விக்குறியாய் தொங்கின. அப்போதுதான் எனது அம்மாவும் இப்படித்தான் இருப்பாவோ? என்ற எண்ணம் என் மனதைக் குடைய நெஞ்சுக் குளத்தில் வேதனைக் கண்ணீர் முட்டி விழிமடலை உடைத்துக் கொண்டு வெளியேறியது. அரசன் அழுததை அருகில் நின்ற வெற்றி கண்டு கொண்டான். டேய் அரசன் ஏன்ரா அழுகிறாய்? அரசன் ஏன் அழுறாய் என்டு சொல்லேன்ரா? வெற்றி அரசனின் தோளை உலுப்பிக் கேட்டான். அரசனுக்குக் குரல் வர மறுத்தது. மாறாக தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தான். சிறிது நேரத்தில் அழுகை ஓய்ந்தது. அரசன் இனியாவது சொல்லன் மச்சான். வெற்றி இரக்கமாய்க் கேட்டான். தன் கைக் குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்து விட்டு அரசன் சொல்லத் தொடங்கினான்.

நான் சிறுவயதாய் இருக்கும்போது 83 கீழே விழுந்து கிடந்தவர்களையெல்லாம் ஏறி மிதித்துக் கொண்டு மக்கள் ஓடினர்.

ஒரு கையில் என்னையும் மறுகையில் கொண்டு வந்த சுமையையுமாக அம்மா என்னைப் பிடிச்சு இழுத்துக் கொண்டு ஓடினா. மற்றவர்களோடு இடிபட்டு தடக்குப்பட்டு விழுந்தபோதெல்லாம்! டேய் குமார் எழும்படா..... எழும்படா...... என உறுக்கி என்ர பேரைச் சொல்லி தொண்டை புடைக்க கத்தி என்னை இழுத்துக் கொண்டோடினா. அம்மா உடுத்திருந்த சேலை சட்டையெல்லாம் வியர்வையால் நனைஞ்சு போச்சு. எனக்கும் அப்படித்தான் கோழியின் செட்டைக்குள் குஞ்சாய் நான் கிளாலிபோய்ச்சேர்ந்தேன்.

விசுங்கள் நீண்ட முதல் வன்னிக்குத் தப்பியோட எல்லாரும் முண்டியடித்தனர். டது. எனக்கு அந்த இருட்டுக்குள்ள திசையொண்டும் தெரியேல்ல ஓடின சனங்களுக்குப் பின்னால் நானும் அம்மா..... அம்மா...! என்று கத்திய படி ஓடினனான். ஆனாலும் அம்மாவை நான் தவறவிட்டுவிட்டேன்.

அழுதழுது சாப்பாடில்லாமல் இரண்டு நாட்களாக அம்மாவைத் தேடி அலைஞ்சன். அம்மாவை நான் கண்டு பிடிக்கேல்ல. ஒரு இடத்தில் புத்தகங்கள் சிதறிக்கிடந்தன. எல்லாம் உளக்குப்பட்டு மடங்கிக் கசங்கி கிழிந்துபோய்க்கிடந்தன. அதனை எடுத்துப் பார்த்தேன். அதில் என்னுடைய பெயர் எழுதப்பட்டிருந்தது. அப்போதுதான் நானும் அம்மாவும் படுத்திருந்த இடம் இவடம் தான் என்பதை உணர்ந்து கொண்டேன். அப்ப இருந்த மனநிலையில் இந்தப் புத்தகங்களை எடுக்க மனம் வரவில்லை. அப்படியே போட்டுட்டு கரைக்கு வந்து ஒரு மாதிரி நுழைஞ்சு நெளிஞ்சு படகில் ஏறி ஆலங்கேணியில் வந்து இறங்கினனான். அங்கையும் அம்மாவைத் தேடிப் பார்த்தன் அங்கையுமில்லை. பிறகு ஒரு லாரியில் ஏறிக்



# அம்மா

யூலைக் கலவரத்தில் அப்பாவை ஆமிக்காரங்கள் சுட்டுப்போட்டாங்களாம். அதுக்குப்பிறகு எல்லாவோ கஸ்டப்பட்டு அம்மா என்னை வளர்த்துக் கொண்டு வந்தா இப்படியிருக்கேக்கதான் 1996ஆம் ஆண்டு சித்திரை மாதம் இரண்டாவது தடவையாக சூரியனின் விசக்கதிர்கள் கலந்து வீசின. கோழிக்குஞ்சுகளின் கூட்டுக்குள் பிராந்துகள் புக, அவைவிடமிருந்து தப்ப மக்கள் வெள்ளம் கிளாலியை நோக்கிக் கரைபுரண்டோடியது. எல்லா மக்களையும் போல நானும் அம்மாவோட கிளாலியைநோக்கி ஓடினோம். எல்லாரும் தங்கள் தங்கள் உறவுகளை மாறிமாறி அவலமாய்க் கூப்பிடும் சத்தங்கள்! செல் வந்து விழுந்து வெடிக்கும். சத்தங்களையும் மீறிக்கேட்டன.

வீதிகள் எங்கும் சிதைந்து சிதங்கலாய்க் கிடக்கும் உடல்கள், காயப்பட்டுக் கைகால்களையிழந்து குற்றுயிராய்க் கிடந்து முனகும் அரையுயிர்கள் நடக்க முடியாத வயதானவர்கள் வீதிகளில் கிடந்து ஓலமிட்டனர். ஒரு பாட்டி தான் கொண்டு வந்த ஒன்று தடியை எங்கையோ தொலைச்சுவிட்டு நடக்க முடியாமல் அவலப்பட்டதை என்ர கண்ணால பார்த்தன். இன்னும் இப்படி எத்தனையோ விபரிக்க முடியாத அவலங்கள் செல்கள் தூரத்திதூரத்தி வந்து வெடிக்க

## ஆவரங்கால் சுதன்

நானும் அம்மாவும் இடிபட்டு நெரிபட்டு கரைக்குப்போனம். முழு மக்களையும் ஏற்றியிறக்கும் வசதி அங்கிருக்கவில்லை. உயிரைக் கையில் பிடிச்சபடி என்ன நடக்குமோ? என்ற அவலத்துடன் அந்தத் தென்னைமரங்களின் கீழ் மக்கள் தங்கினர். பகல் இரவாகியது. கொண்டு வந்த உடமைகளை பக்கத்தில் வைச்சிட்டு அம்மா தன்ரை கொடுக்கைக்குள்ள என்னை அணைச்சு தன்னுடைய சீலையின் தலைப்பால் என்னை மூடிக்கொண்டு கிடந்தா. அம்மா விடும் மூச்சின் வெம்மையில் எனக்கு நித்திரை வராமல் அப்படியே கிடந்தேன்.

இதுவரைக்கும் சற்று எட்டத்தில கேட்ட செல் சத்தங்கள் இப்ப நாம் படுத்திருந்த பகுதியில் மிக அருகாமையில் வீழ்ந்து வெடித்தன. ஒன்றுமே தெரியாத அந்தப் பகைவிருட்டில் ஐயோ.... என்ற ஓலத்தின் ஒலியைத்தவிர வேறெதுவும் கேட்கவில்லை. படுத்திருந்தவர்களிலே சிலர் நிரந்தரமாய் படுத்துக்கொண்டனர். செல்கள் அடிக்கொன்றாய் விழ குளறிக் கொண்டு இருட்டில் முட்டிமோதி கால் போன போக்கில் எல்லோரும் ஓடினர். அந்த இருட்டுக்குள்ள குமார் குமார் ஐயோ தம்பி இஞ்ச ஓடிவா என்று அம்மா கூப்பிடும் சத்தம் மட்டும் எனக்குக் கேட்

கிளிநொச்சிக்கு வந்தன். அங்கை அப்பிடிஇப்பிடி என்டு தொட்டாட்டவேலைசெஞ்சு கிடைக்கும் காசுக்கு கடையளில சாப்பிட்டன். நாட்கள் கரைய அந்த அவலத்துக்கு காரணம் யார் என்டு சிந்தித்து உணர்ந்து கொண்டன். போராடும் எண்ணம் வலுப்பெற்றது. ஒரு நாள் இயக்கண்ணையைக் கண்டு அண்ணை நானும் உங்களோட வாறன் என்டு சொல்லி அவரோட வந்து சேர்ந்திட்டன்.

அதுக்குப் பிறகு கள இறுதிகள் அம்மாவின் நினைவுகளில் நான் அழுத இரவுகள் ஏராளம். அந்த இரவுகள் ஒன்றும் உங்களுக்குத் தெரியாது வெற்றி. அரசன் நீ உங்கட வீட்டு விலாசத்திற்கு அம்மாவுக்குக் கடிதம் போடலாம் தானே? இல்லை மச்சான் வெற்றி, எங்கட சொந்த இடம் பலாலி, அங்கையிருந்து நாங்கள் 1990ஆம் ஆண்டே வெளிக்கிட்டபிறகு கோப்பாயில வந்திருந்தம். கோப்பாயில நான் இருந்த விலாசத்திற்குக் கடிதம் போட்டனான். பதிலொண்டும் வரேல்ல. அம்மா அங்கையும் இல்லைப் போல கிடக்கு சோகத்தின் கருக்குகள் முகத்தில் படர இருந்திருந்தா நிச்சயமாய் அம்மா பதில் போட்டிருப்பா வெற்றி.


(தொடர்ச்சி 15ம் பக்கம்)

# கணப்பொழுது





Tamileelam Archive




## முதலாம் பாகம்
### அத்தியாயம் முப்பத்திரண்டு

தொடர்ச்சி...

உண்ணாவிரதப் போராட்டம் எக்ஸோடசில் பிரகடனப்படுத்தப் பட்டது.

காரா ஓலொஸ்கக்குத் திரும்ப மறுத்த பிள்ளைகள் பட்டினிகிடக்க முடிவு.

இரண்டு வாரங்களாகக் கதையை வளரவிட்டு விட்டு, ஒருவரும் எதிர் பார்க்காதவகையில் யுக்தியை, தாக்குதலுக்கு அரி பென் கானான் மாற்றினான். இப்போது பொறுத்திருந்து பார்ப்போம் என்ற விளையாட்டெதுவும் கிடையாது. குழந்தைகள் முடிவொன்றைப் பலவந்தமாகத் திணிக்கத் தொடங்கிவிட்டார்கள். கப்பலின் பக்கப் பலகையில் ஒரு பெரிய அறிவிப்புப் பலகை தொங்க விடப்பட்டு, ஆங்கிலம், பிரெஞ்சு, ஹீப்ரு மொழிகளில் பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தன.

உண்ணாவிரதப் போராட்டம் — மணித்தியால இல. 1

உண்ணாவிரதப் போராட்டம் — மணித்தியால இல. 15

இரண்டு பையன்களும், ஒரு பெண் பிள்ளையும் பத்து, பன்னிரண்டு, பதினைந்து வயதுடையவர்கள், மேலே கொண்டு செல்லப்பட்டு எக்ஸோடசின் முன் தளத்தில், உணர் விழந்த நிலையில் படுக்க வைக்கப்பட்டார்கள்.

உண்ணாவிரதப் போராட்டம் — மணித்தியால இல. 20

பத்துக் குழந்தைகள் தளத்தில் கிடத்தப்பட்டிருந்தார்கள்.

கிறீஸ்துவுக்காக— கிற்றி— அங்குமிங்கும் நடப்பதைவிடுத்து உட்கார்'

இப்போ இருபது மணித்தியாலங்களுக்கு மேலாகிவிட்டது. என்னும் எவ்வளவு காலம் இதை நடக்க விடப் போகிறான். கட்டுத்துறைக்குச் சென்று பார்க்க எனக்குத் துணிவில்லை. தளத்தில் உணர்விழந்து கிடக்கும் பிள்ளைகளில் கரேனும் இருக்கிறாளா?'

அவள் இல்லையென்று இத்தோடு பத்துத் தரம் சொல்லி விட்டேன்.'

அவர்கள் ஆரம்பத்திலேயே அவ்வளவு நலமாக இருக்கவில்லை. இப்போ இந்தக் கப்பலில் இரு வாரங்கள் அகப்பட்டு விட்டார்கள். அவர்களிடம் உடல் பலம் எதுவும் இல்லை. கிற்றி சிகரட் ஒன்றை பதகளிப்புடன் பலமுறை இழுத்துவிட்டு, தலைமயிரையும் இழுத்துவிட்டுக் கொண்டபடி சொன்னாள், அந்த மனிதன் ஒரு மிருகம்... மனிதத் தன்மையில்லாத மிருகம்.'

நான் இதைப்பற்றி யோசித்திருக்கிறேன். மார்க் சொல்லிவிட்டு தொடர்ந்து, நான் அநேக தடவைகள் இதைப் பற்றித் தீவிரமாகச் சிந்தித்திருக்கிறேன். இந்த மக்களை இவ்வளவு தீவிரமாகச் செயல்படவைப்பது என்ன என்று எங்களுக்குப் புரிந்திருக்கிறதா? நீ எப்போதாவது பலஸ்தீனத்தைப் பார்த்திருக்கிறாயா? அது தென்பகுதியில் ஒரு பெறுமதியும் இல்லாத வனாந்தரம். நடுவில் அரிக்கப்பட்டு இருக்கிறது. வடக்கில் சதுப்பு நிலமாக இருக்கிறது. அது துர்நாற்றம் மிகுந்தது. அது சூரியனால் காய்ச்சப்பட்டுக் கொண்டிருக்கும் இடம். 5 கோடி பரம விரோதிகளின் நடுவே இருக்கிறது. ஆயினும் தலைவிதியாக நின்றாவது அங்கு போக முயற்சிக்கிறார்கள். தேனும் பாலும் ஓடும் நாடு என்று சொல்வார்கள். அவர்கள் நீர் பீச்சியடிப்பது பற்றியும், நீர்ப்பாசன வாய்க்கால்கள் பற்றியும் பாட்டு பாடுவார்கள். இருவாரங்களுக்கு முன்தான் நான் அரி பென் கானானிடம் துன்பப்படுவது அவர்களுக்கு மட்டும் உரிமையானதல்ல என்று கூறினேன். ஆனால், இப்போ அதைப்பற்றித் திரும்பச் சிந்தனை செய்துகொண்டிருக்கிறேன். சத்தியமாக சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். இவ்வளவு கடுமையாக முயற்சி செய்யத் தூண்டுமளவிற்கு அவர்களுக்கு என்ன தீங்கிழைத்திருக்கலாம் என வியப்புறுகிறேன்.'

அவர்கள் சார்பாகப் பேசாதே மார்க். அந்த மக்கள் சார்பாக வாதாடாதே.'

ஒன்றை மட்டும் ஞாபகம் வைத்துக்கொள். குழந்தைகளின் ஆதரவு இல்லாமல் பென் கானானால் இதைச் செய்ய முடியாது. நூற்றுக்கு நூறு வீதம் அவன் பின்னால் நிற்கிறார்கள்.'

அது தான் என்னை மிகவும் பாதிக்கிறது என்ற கிற்றி தொடர்ந்து 'அந்த விசுவாசம். அந்த உன்னதமான முறையில் ஒருவருக்கொருவர் வைத்திருக்கும் விசுவாசம்' என்றாள்.

தொலைபேசி ஒலித்தது. மார்க் எடுத்து கவனமாகக் கேட்டுவிட்டு திரும்பவைத்தான்.

என்ன மார்க்! என்னவாம்?'

இன்னும் சில குழந்தைகளை உணர்விழந்த நிலையில் மேல்தளத்துக்கு கொண்டு வந்திருக்கிறார்களாம். ஆறேழு பேர்வரை'

'கரேன்?'

'எனக்குத் தெரியாது. போய் தெரிந்து கொண்டு வருகிறேன்'

'மார்க்.'

'என்ன?'

நான் எக்ஸோடசுக்குப் போக விரும்புகிறேன்.'

'அது நிச்சயமாக முடியாது.'

'இதை என்னால் மேலும் தாங்க முடியாது' அவள் கூறினாள்.

'இதை நீ செய்யப் போனால் நீ தொலைந்தாய்'

'இல்லை. மார்க். இது வித்தியாசமானது. அவள் உயிரோடிருப்பது தெரிந்தால் என்னால் தங்கியிருக்க முடியும். அவள் இறந்து கொண்டிருப்பதைத் தெரிந்து கொண்டு என்னால் சும்மா இருக்க முடியாது'

'நான் நீ எக்ஸோடசுக்குப் போவதற்கு அரி பென் கானானைச் சம்மதிக்கச் செய்தாலும், பிரிட்டிஷார் உன்னை அனுமதிக்க மாட்டார்கள்'.

'நீ ஏதாவது செய், கட்டாயம் நீ செய்யத்தான் வேண்டும். அவன் சென்று தன் பின்புறத்தைக் கதவில் வைத்துக்கொண்டு அவள் வெளியே செல்லக்கூடிய வழியை மறைத்தான். அவளுடைய முகத்தில் தீர்மானித்து விட்டதன் அடையாளம் தெரிந்தது. மார்க் தன் கண்களைத் தாழ்த்தி, என்னால் முடிந்ததை நான் செய்கிறேன் என்றான்.'

உண்ணாவிரதப் போராட்டம் — மணித்தியால இல. 35

பிரிட்டிஷ் தூதுவராலயங்களின் முன் கோபமுற்ற சனக்கூட்டம். பாரிஸ், றோம் ஆகிய நகரங்களில் ஆர்ப்பாட்டம் செய்தன. ஆவேசமான பேச்சுக்களும், பதாகைகளும் எக்ஸோடசை விடுவிக்கச் சொல்லிக் கோரிக்கை விடுத்தன. பொலிஸ் குண்டாந்தடிகளும், கண்ணீர்ப் புகையும் பாரிசில் சனக் கூட்டத்தைக் கலைக்க உபயோகிக்கப்பட்டன. கொப்பன்ஹேகனில், ஸ்டொக் ஹோமில், புருசல்ஸில், ஹேக்கில் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. ஆனால் இவை சிறிது ஒழுங்கோடு நடந்தன.

உண்ணா விரதப் போராட்டம் மணித்தியால இல. 38

பிரிட்டிஷாருக்கு எதிராக சைப்



## லியோன் யூரிஸ்

பிரஸ் எங்கும் ஒரு தன்னிச்சையான வேலைநிறுத்தம் பரவியது. போக்குவரத்துக்கள் ஸ்தம்பிதமடைந்தன. வர்த்தக ஸ்தாபனங்கள் மூடிக் கிடந்தன. துறைமுகங்கள் மூடிக்கிடந்தன. திரையரங்குகளும், போசன சாலைகளும் தங்கள் கதவுகளை இறுக்க மூடிக் கொண்டன. பாமாகுஸ்டா, நிக்கோசியா, லார்நாகா, லிமாசோல் போன்ற நகரங்கள் சவச்சாலை போல் தோற்றமளித்தன.

உண்ணா விரதப் போராட்டம் — மணித்தியாலம் — இல 40

அரி பென் கானான் தன் உதவியாளர்களை உற்று நோக்கினான். ஜோஆப், டேவிட், செல், ஹாங் சொல்ஸ் போர்க் ஆகியோரின் சோர்வடைந்திருந்த முகங்களை உற்றுப் பார்த்தான்.

'கலீலீ, கமக்காரனான செல் முதலில் பேசத் தொடங்கி, நான் ஒரு போர் வீரன். என்னால் பிள்ளைகள் பட்டினி கிடந்து செத்துக் கொண்டிருப்பதைத் தாங்கிக் கொண்டு சும்மா நின்று கொண்டிருக்க முடியாது'

பலஸ்தீனத்தில் இவர்களையொத்த சிறுவர்கள் ஏற்கனவே காடர் (Cadre) வில் போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்றான் வெடித்தபடி அரி.

'போராடுவது ஒன்று, பட்டினியால் மடிவது வேறொன்று'

'இது இன்னொரு வகைப் போராட்டம்தான்'

ஜோஆப் பார்கோனி அரியுடன் பலவருடங்கள் தொடர்ந்து வேலை செய்திருந்ததோடு, 2ஆம் உலகப் போரின் போதும் அவனோடு சேவையாற்றியிருந்தான். 'நான் உனக்கெதிராகப் போகவிரும்பவில்லை அரி. ஆனால் ஒரு குழந்தை இறந்த மறுகணம் முழு விஷயமும் எங்களுக்கு எதிராகத் திரும்பக் கூடும்.'

'அரி, அமெரிக்க கப்டனான ஹங் சொல்ஸ்போர்க்கை நோக்கினான். அவனோ தோள்களைக் குலுக்கி விட்டபடி, நீ தான் இங்கு தலைவன், அரி. ஆனால் மாலுமிகள் குழப்பமடைந்திருக்கிறார்கள். அவர்கள் இப்படி ஒரு நிலைமையை எதிர்பார்த்து வேலைக்கு வரவில்லை.'

'வேறு வார்த்தைகளில் சொன்னால், நீங்கள் சரணடைய விரும்புகிறீர்கள்.'

அவர்களின் மௌனம் அதை உறுதிப்படுத்தியது.

'டேவிட், நீ என்ன நினைக்கிறாய். நீ பேசி நான் கேட்கவில்லையே.'

டேவிட் கல்விமானாகவும், ரோறாவிலும், மற்றைய பரிசுத்த புத்தகங்களிலும் ஊறிப்போனவன். அவன் மற்றவர்களைவிட இறைவனுக்கு நெருக்கமானவனாக இருந்தான். மற்றவர்களும் அதை மதித்து வந்தனர்.

'அறுபது இலட்சம் யூதர்கள் நாங்கள் ஏன் சாகிறோம் என்று தெரியாமலே விச வாயுகூடங்களில் மடிந்தார்கள். இங்கு எக்ஸோடஸில் இருக்கும் முந்நூறு பேர் மடிந்தால் ஏன் சாகிறோம் என்றாவது நிச்சயமாகத் தெரியும் உலகத்துக்குத் தெரியவரும். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் நாம் ஒரு நாடாக இருந்த போது ரோம, கிரேக்க, ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக புரட்சி செய்த போது யூதர்களாகிய நாங்கள் கடைசி ஆள்வரை போராடி மடிந்து பாரம்பரியத்தை நிலைநிறுத்தினோம். நாங்கள் இதையே ஆர்பெல்லாவிலும் (Arbela) ஜெருசலேமிலும் செய்தோம். பெய்டார் (Beitar) ஹீரோடியம் (Herodium) மச்சாறாஸ் (Machaerus) ஆகிய இடங்களிலும், அப்படியே மசாடா (Masada) வில் ரோமர்களுக்கு எதிராக நாங்கள் நாலு வருடங்கள் போராடினோம். கடைசியாக அவர்கள் கோட்டைக்குள் நுழைந்தபோது எல்லோரும் எல்லோரும் இறந்திருக்கக் கண்டனர். உலகில் எங்கும், எவரும், எமது மக்கள் சுதந்திரத்திற்காய் போராடியது போல் போராடவில்லை. நாங்கள் உலகில் நான்கு மூலைக்கும் சிதறடிக்கப்படும் வரை எங்கள் மண்ணிலிருந்து ரோமர்களையும் கிரேக்கர்களையும் விரட்டியடித்துக்கொண்டே இருந்தோம். இரண்டாயிரம் வருடங்களாக ஒரு இனமாகப் போராடியதற்கு வாய்ப்புக் கிடைக்காமல் போய் விட்டது. வார்சோ யூதசேரியில் அந்தவாய்ப்புக் கிடைத்தபோது எமது பாரம்பரியத்துக்கு பெருமை சேர்த்தோம். இப்போது இந்தக் கப்பலை விட்டிறங்கி, முட்கம்பி வேலிச் சிறைகளுக்குள் சென்றால் கடவுள் விசுவாசத்தை உடைத்தவர்களாவோம்.

தொடரும்...

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

## இரு வாரத்துக்கு ஒருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

அன்புடைத் தமிழீழச் சகோதரமே!

வன்னி மக்கள் தமக்கு உணவும் மருந்தும் கிடைக்க வழி செய்யும்படி வன்னியில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் முன்பாக நடத்தி வந்த மக்கள் போராட்டங்களின் அழுத்தங்களும் அதற்கு உலகளாவிய நிலையில் புலம்பெயர் தமிழீழ மக்கள் காட்டிவந்த ஆதரவும் இன்று சிறீலங்காவின் மேல் ஓரளவுக்காவது உணவு அனுப்பியே ஆகவேண்டும் என்ற நெருக்கத்தை ஏற்படுத்தியது. இந்த நேரத்திலும்கூட அதனை தனது இராணுவ நலன்களுக்கு சிறீலங்கா பயன்படுத்த முயன்றதும் ஆனால் விடுதலைப் புலிகளின் தெளிவான உறுதியான முடிவுகள் கடைசியாக அவற்றுக்கு இடம்கொடுக்காத நிலையில் வன்னி மாங்குளம் பாதை ஒரு சில மணித்தியாலங்களுக்காவது திறக்கப்பட்டு மிகக்குறைந்த அளவான உணவுடன் கூடிய லொறிகள் சிலவும் போக்குவரத்து பயணிகளும் அதனூடாக பயணப்பட்டதும் நீ அறிந்தவையே. இந்த பாதை திறப்பு மக்கள் உடைய தொடர்ச்சியான போராட்டத்திற்கு கிடைத்த சிறு வெற்றி. அவ்வாறே விடுதலைப் புலிகளை காட்டுக்கு அனுப்பி விட்டோம் என்று கொக்கரித்த அநுருத்த ரத்வத்தையின் படையினரே விடுதலைப் புலிகளுடன் தேடிப் பேசி பாதை திறப்பு ஒழுங்குகளைச் செய்தமை சந்திரிகா ரத்வத்தை குடும்பத்தினரின் கண்களையும் யதார்த்தத்தை உணரும்படி அகலத்திறக்க வைத்துள்ளது.

மேலும் இராணுவத் தீர்வு மூலம் பாதை திறக்க முயன்று ஜயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையை நடாத்திய சந்திரிகா அரசாங்கத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்படுத்திய படுதோல்விகள் தமிழர் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு எவ்வகையிலும் சாத்தியமாகாது என்ற உண்மையை உலகிற்கு தெளிவாக்கியுள்ளது. இந்நிலையில் சந்திரிகா தனக்கு சர்வதேச சமூகத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கங்களை சமாளிப்பதற்கு எடுத்த ஒரு நடவடிக்கையே இந்த ஓரளவு உணவு அனுப்புவதற்கான பாதை திறப்பு. ஆயினும் தமிழ் மக்களுக்கு ஏற்படக் கூடிய எந்த சிறு நன்மையையும் கூட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கவனமாகப் பரிசீலித்து அதற்கு ஏற்றன செய்யும் என்பதற்கு உதாரணமாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் பாதை திறப்புக்கு அனுமதியளித்தது. ஆனால் அந்த பாதையூடாக சிறீலங்கா வன்னிக்கு அனுப்பி வைக்கும் உணவு யானைப் பசிக்கு பொரி கொடுத்த கதையாகவே உள்ளது. தமிழீழ மக்களுக்கு என்று அவர்களது அரசாங்கம் என்று அவர்களது நலன்களைக் கவனிக்கத் தொடங்குகின்றதோ அன்று வரை இந்த நிலை எல்லா நிலைகளிலும் இருக்கும் என்பது அனைத்து தமிழ் மக்களும் அனுபவபூர்வமாக அறிந்த தெரிந்த உண்மை. ஆதலால் தான் தமிழீழ மக்கள் எல்லாத்துன்பங்களையும் தாங்கி தமது தாயகத்தின் விடுதலைக்காக நீண்ட பயணம் ஒன்றை தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமையில் உறுதியுடன் நடாத்தி வருகின்றனர். இந்த பயணம் தமிழீழ மக்களுக்கு ஆதரவான நிலைகளை சர்வதேச மட்டத்தில் தோற்றுவிக்கும் கால கட்டங்களில் எல்லாம் சிறீலங்கா தமிழ் மக்கள் மேல் அக்கறை காட்டுவது போல் நடித்து அந்த நிலையை நெருக்கத்தை மாற்றி விட்டு பழையபடி தனது இனஅழிப்பு அரசியல் செயல்பாட்டினை தொடர்வது தமிழர்கள் அறிந்த உண்மை. இந்த உண்மையை எவ்வளவு தூரத்திற்கு உலகறிந்த உண்மையாக மாற்றுகின்றோமோ அவ்வளவு தூரத்திற்கு சிறீலங்காவின் உண்மைச் சொருபத்தை உலகு இனங்கண்டு தமிழீழ மக்களுக்கு அவர்களுடைய அரசாங்கத்தின் தேவையை ஏற்றுக் கொள்ளும். தமிழீழ மக்களுக்கு பாதுகாப்பே அதிமுக்கிய பிரச்சினையாக உள்ளது.

அந்த பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கும் ஒரே சக்தியாக தமிழர் தாயகத்தில் தமிழர்களுடைய வீட்டு வாசல்படிதோறும் சந்திரிகா நிறுத்தி வைத்திருக்கும் சிறீலங்காப் பாதுகாப்பு படைகளே உள்ளனர் என்பதற்கு மற்றொரு சாட்சியாக கடந்த ஜூலை பன்னிரெண்டாம் திகதி சிறீலங்கா இராணுவத்தால் கதறக் கதற குதறிக் கொல்லப்பட்ட அப்பாவி இருபத்தொரு வயது தமிழ் பெண் ஜுடா காமலிட்டாவின் வரலாறு உலகின் முன் அவரின் தாயாரால் வைக்கப்பட்டுள்ளது. இந்த சிறீலங்கா பாதுகாப்புப் படைகள் தமிழ் மக்களின் உயிரை உடலை உடமைகளை தங்கள் இலக்குகளாக கொண்டு செயற்படும் பயங்கரத்தை சர்வதேச சமூகம் இனியும் பார்த்திருக்க புலம் பெயர் தமிழ் மக்களாகிய நாம் ஒருபொழுதும் அனுமதிக்க முடியாது. இந்த உணர்வுடன் தமிழீழப்புலம் பெயர் மக்கள் திரண்டெழுந்து எங்கள் தமிழீழ உடன்பிறப்புக்களின் உயிரை உடலை உடமைகளை காக்கும் சக்திகளாக நாம் நம்மை உடன் வெளிப்படுத்த வேண்டும். சர்வதேச சமூகத்திடம் நீதி கேட்போம். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதியளிப்போம். இவை இரண்டும் ஏககாலத்தில் இடம்பெற்றாலே எங்கள் மண்ணில் நின்று அந்நிய படைகள் வெளியேற்றப்பட்டு எங்கள் மக்கள் பாதுகாப்பான அமைதி வாழ்வு பெறுவர். இதற்காக உழைக்க வேண்டியது புலம்பெயர் தமிழீழ மக்களாகிய எமது பெரும் கடமை.

வணக்கம்
அன்பின் ஆசிரியர்
(26.08.1999)

(12ம் பக்கத் தொடர்ச்சி)

## அம்மா..

அரசன் உன்ர கடிதம் கொம்மாவுக்குக் கிடைக்கேல்லையாக்கும்.

இல்லை மச்சான் என்னை இஞ்சாலை நிக்குதெண்டு அம்மா அறிஞ்சாலே ஓடியே வந்திருப்பா. ஒரு நிமிசம் கூட அம்மா பிரிந்திருக்க மாட்டா. நான் ஒரேயொரு பிள்ளை. அப்படியான என்னில அம்மா எவ்வளவு பாசம் வைத்திருப்பா என்டதை உனக்கு நான் சொல்லித்தான் தெரிய வேண்டுமெண்டில்லை வெற்றி.

ஆரேனும் சொந்தக் காறரைக் கண்டால் அம்மாவைப் பற்றி விசாரிக்கலாமெண்டு என்ர மனதுக்குள்ள எவ்வளவு கற்பனைகளை வளர்த்தன். ஆனால் என்ர கஷ்ட காலம் நான் யாரையுமே சந்திக்கேல்ல தேகம் ஊதி மேலே உயர பெருமூச்சொன்று வெளியேறிப்போனது.

அது தான் வெற்றி அந்த அம்மாவைக் கண்டவுடன் என்ர அம்மாவின்ர நினைவுகள் என்னைச் சுற்றி சுழன்று புயலாய் வீசி பேரலைகளாய் எழுந்தன. அம்மா என்னைக் காணேல்லை எண்டு தற்கொலை செய்தாவோ இல்லாட்டி கிளாலியிலதான் செத்துப்போனாவோ? அல்லது விசர் பிடிச்சு அலைகிறாவோ? தெரியாது என நா தழுதழுத்தபடி கூற கண்ணீரும் பொலுபொலுவென மணிக்கள் கொட்டியது.

வெற்றியின் கண்களும் சிவந்து நீர்த் துளிகள் எட்டிப்பார்த்தன. அதை மறைத்தவனாக அரசனைத் தன் மடியில் படுக்க வைத்து தன் கைக்குட்டையால் அவனது மூக்கைத் துடைத்து தன் கைவிரல்களை அவனது கேசத்திற்குள் நுழைத்து வருடிக் கொண்டிருந்தான் வெற்றி. [illegible] அரவணைப்பின் நிலைப்பில் அரசன் தூங்கிப்போனான்.

(05-ம் பக்கத் தொடர்ச்சி)

## தமிழின அழிப்பே ஒரே நோக்கம்.

மற்றவைகளாகிப் போவதுடன் நாம் மீண்டும் அடிமைவாழ்வுக்கு தள்ளப்படநேரும் எனவேதான் எல்லாரும் ஆயுதமேந்தத் தயாராகுங்கள். போர்க்களத்தில் குதியுங்கள்' என்று.

வழிவழிவந்த சிங்கள அரசுகள் எவ்வாறு அற்ப சலுகைகளை அறிமுகப்படுத்தி நொந்தழிந்து போன தமிழர் இதயங்களைக் குணப்படுத்துவதில் அக்கறை காட்டிற்றோ அது போலவே சந்திரிகா அரசும் தமிழர்களைக் காட்டிக் கொடுத்து, வாக்குறுதிகளாலும் அள்ளி வீசுகிறது. விளையாட்டுக் குழுக்களை இடமாற்றி விளையாடவைக்கும் அழிக்கப்பட்ட நூலகங்களை கட்டித்தரும் காருண்ய வேலைகளில் முனைகின்றது. ஆனால் தமிழினத்துக்கு ஏற்படுத்தப்பட்டுவந்த ஏற்படுத்தப்படும் ஆழப்பதிந்த வடுக்களை வெறும் சில்லறை பம்மாத்து வேலைகளால் மறக்க வைத்துவிட முடியாது.

சிங்கள அரசோ சிங்களமோ நமது எஜமானர்கள் அல்லர். அந்த அவலக்கு தரங்கெட்ட இனமுமல்ல தமிழர். நாம் போராடியே நமது உரிமையைப் பெற வேண்டும்.

## நெடுநோள் வாடை

நா. முத்துக்குமார் (தமிழ் நாடு)

நாராய் நாராய்-
செங்கால் நாராய்-
உறைவிடக் கதிரின்
[illegible]
நீள் நா நாராய்-
நீயும் உன் துணையும்
வடதிசைக் கடலேகி
தென்திசை நோக்கி
பயணிப்பீராயின்
கழுகுகள் வட்டமிடும்
ஊரைச் சேர்ந்த
எம் மக்களைக் காண்பீர்.
துப்பாக்கி ரவைகள்
துளைத்த மரக்கிளையில்
தூங்காமல் தங்கி
சிறகை விரித்தால்
கடல் சூழ் அவ்வூரை
காண்பது எளிது.

விண்ணேகும் உன்பார்வையில்
மண் கலக்கும் உடல்களில்
காயம் கலந்த முலைகள்
பெண் என்றும்
களம் கலந்த கண்கள்
ஆண் என்றும்
இனம் பிரித்துக் காண்பாய்.
கடைசியாய்
ஒப்பாரிச் சத்தத்தில்
தாலாட்டுக் கேட்கும்
குழந்தைகளிடத்து
காதுகளைக்கொடு
சின்னஞ் சிறு உதடசைத்து
அவர்கள் சொல்வார்கள்
வரலாற்றின் புதைகுழியில்
மனிதர்களைப் புதைக்கலாம்
மாவீரர்களை அல்ல!




# இருள் பறவைகள்

இருள் பறவைகள்
இருள் முட்டைகளை
தாயை பிடித்த பேய்கள் இட்டன
பாம்புகளுக்கும்
பாம்பாட்டிகளுக்கும்
இந்த இருள் பறவைகளுக்கும்
பொய்யுறவேயன்றி பகன்றிட யாதும் இல்லை

இருளின் பறவைகளா?

ஆம்!
இருளின் பறவைகளே தான்

இருளைப் பருகும்,
பாறாங் கல்லென எண்ணி
தாயின் கூனல் முதுகில் குந்தியிருக்கும்
அடிமை வலையை அலகால் இழுத்து வரும்
விடுதலை: தாயின் இதயத்தில்
ஈட்டியைச் செருகும்,
தாயின் சிந்தும் துளி இரத்தத்தை
பாம்புக்கு, பெரும்படைக்கு
ஆமிக்கு, குரங்காட்டிக்கு
யானைக்கு, கைக்கு
கழுகுக்கு தாரை வார்த்தக் கொடுக்கும்

விடுதலைப் பறவைகளின் மீது
இருள் பறவைகளுக்கு
ஏன் இப்படியொரு கோபம்?

அதுவோ!
ஆண்டவனாய்
அடிமையிருளில் கிடந்து
அடைகாத்த மோகம்

இருள் பறவைகள்
ஒளியை விரும்புவதில்லையா?

ஒளி துலக்கின்
அவைகள் ஒடுங்கிப்போகும்
தோளில் யாரையும்
சுமத்தல் முடியாது
பல்லக்குக் காவுதல் நின்று போகும்
இரக்கும் தட்டை இழக்க நேரிடும்
இதனால் அஞ்சி இருளின் பறவைகள்
ஒளியை நெருங்குவதே இல்லை.

விடுதலைப் பறவைக்கோ
வெளியில் நாட்டம்
விட்டு விலையாதல்
அதன் இலக்கு
பூமியில் நிகழும் பொல்லாப்புக்களை
அறியும் அதன் நோக்கு
வேலிகள் இடுவதில்லை அதன் வேலை
வேலிகள் தகர்ப்பதும்
எல்லைகள் தகர்ப்பதும்
அதன் இயக்கம்
பெருமுழக்குக் காரன் போல
இறக்கைகள் அடித்து
வெளியில் நிகழ்த்தும்
விடுதலை முழக்கு!

இருள் பறவைக்கு
இதனால் அச்சம் பெருக
கூடிக் கூடி
முட்டைகள் இடுவதே அதன் குறி

கூடிக் கூடியா
எதனுடன் கூடி?



எதனுடனும் கூடும்
கூடுவதில் இலக்கா?

பருந்துடனும் கூடுமா?

கையசையின்
கழுகான கழுகுடனும் கூடும்
கூடிக் களித்து
முட்டைகள் இடும்

முட்டைகள் இடுமா?

இதில் என்ன வியப்பு

முட்டைகள் இட்டு?

முட்டைகள் இட்டு
உன் தலையில் வைக்கும்

பின்ன என்ன கேள்வியிது?
முட்டைகள் இட்டால் என்ன நிகழும்
நீயே சொல்?

குஞ்சுகள் பொரிக்கும்
வேற...

குஞ்சுகள் பொரித்து மேயப் போகும்
இன்னும் சில குஞ்சுகளுடன்
கூட்டு வைக்கும்
இருளில் அடைந்து எங்கும் கிடக்கும்
பூமியில் எங்கும் பறந்து திரியும்
மிகு...
குஞ்சுகள் பொரித்து வேலியை மேயும்
இன்னும் சில குஞ்சுகளைக் கூட்டி
ஒளியை விழுங்கும்
இருளில் அடைந்து கிடந்து
தாய் சோகையுற
இரத்தம் குடிக்கும்
பூமி எங்கும் பறந்து
அடிமை இருளை மூடத்துடிக்கும்

அய்யோ ஆபத்தல்லோ!

இப்போ மட்டும் புரியுதாக்கும்
இன்னிலை முன்னரே
உணர்ந்தவர் யாரோ
அவரே எங்கள்
விடுதலையின் தரிசனர் என்போம்

அண்ணே நான் பாடட்டா?
ம் பாடு!
தாயை பிடித்த பேய்களுக்கு இனி சங்காரம்
சங்காரம்
அவள் தாளில் விலங்கிட்டோருக்கு இனி சங்காரம்
சங்காரம்

களிக்கொண்டாடுதே கொடும் பாவிமிருள்
ஒளித் தரிசனர் வருகின்றார்
ஒளியாலும் உலகைக் கண்ட
எங்கள் விடுதலையின் தரிசனர் வருகின்றார்

தாயைப் பிடித்த பேய்களுக்கு இனி சங்காரம்
சங்காரம்
தாழ்வு அகன்று இனி
எங்கும்
மேவும் உயர் விடுதலையே.

கூத்தன்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive